உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine
www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-174
பிப்ரவரி 16-29 2024



# சரணாகதி இறைவனே கடைப்பிடிக்கும் சங்கல்பம்

# கல்யாண வரம் தரும் கண்ணன்

தென்காசிக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில், இலத்தூரில் நவநீதகிருஷ்ணர் அருள்கிறார். ஒரு முறை இந்தக் கண்ணனை தரிசித்தவர்கள் அடுத்த முறை தரிசிக்க வருவதற்குள் வாழ்வில் முன்னேற்றம் அடைகின்றனர் எனும் நம்பிக்கை நிலவுகிறது. இவரை தரிசனம் செய்தால் திருமணம், ஆரோக்கியம், தொழில், குடும்ப சந்தோஷம் என வாழ்வு வளம் பெறுவதாக சொல்கிறார்கள்.

# ஒரே கோயிலில் நான்கு தாயார்கள்

பாளையங்கோட்டையில் உள்ள ராஜ கோபாலசுவாமி ஆலயத்தில் மூலவர் வேத நாராயணப் பெருமாளுக்கு அருகே ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் அமர்ந்த கோலத்திலும், வேதவல்லி, குமுதவல்லி இருவரும் நின்ற கோலத்திலும் காட்சியளிக்கிறார்கள்.



# தாளம் இல்லா சம்பந்தர்

மயிலாடுதுறையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள சித்தர்காட்டில் இறைவன் பிரம்மபுரீஸ்வரராகவும், இறைவி திரிபுரசுந்தரியாகவும் தரிசனமளிக்கின்றனர். இத்தலம் சம்பந்தர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. ஞானசம்பந்தர் கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கிறார். அதனால் அவர் கையில் தாளம் இல்லை. பிராகாரத்தில் சமயக்குரவர்கள் நால்வரும் நின்றபடி இருக்க, சேக்கிழார் அமர்ந்தபடி கைகூப்பி காட்சியளிப்பது




# இருமடங்கு பலன் தரும் மரா

வால்மீகி ராம மந்திரத்தை மரா என்றே உச்சரித்தார். அவர் மரா..மரா..மரா என வேகமாகச் சொல்லும் போது, அது இயற்கையாகவே ராம என மாறி விட்டது. ராம மந்திரத்தை மரா என்று சொல்ல ஆரம்பிப்பது இரட்டிப்பு பலன்தரும். மரா என்றால் போக்கடிப்பது, நீக்குவது என்று பொருள். பாவத்தைப் போக்கும் மந்திரம் ராம மந்திரம். ராம என்று சொல்லும் போது, ரா என்ற எழுத்துக்கு உதடுகள் திறக்கும். ம என்ற எழுத்தின் உச்சரிப்பின் துவக்கத்தில் மூடிக் கொள்ளும். அதாவது, இந்த மந்திரத்தால் உள்ளிருந்து வெளியே சென்ற பாவம் மீண்டும் நம்மை அண்டுவதில்லை. உத்தமமான ராமநாமம் சொல்லுங்கள். பாவத்தில் இருந்து விடுதலையும், அதனால் இவ்வுலக வாழ்வில் செல்வவளம் உண்டாகும்.

e-magazine
aanmeegamalar.com

# பழனி முருகன் சிலையை செய்ய கடும் பயிற்சி செய்த முனிவர்கள்

e-magazine
aanmeegamalar.com



இன்றுவரை புரியாத புதிராக இருப்பது பழனி முருகன் சிலை. இந்த சிலையில் கலந்துள்ள மூலிகைகளைப்பற்றியும், மூலிகையின் தன்மைகளைப் பற்றியும் ஆராய எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் வீணாகிப்போனதே தவிர, சிலையில் மா்மத்தையும், அதில் உள்ள மூலிகைகளின் வகைகளையும் இதுவரை யாராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

பழனியாண்டவர் சிலையை உருவாக்க போகர் பயன்படுத்தியது நவபாஷாணங்கள்.

வீரம், பூரம், ரஸம், ஜாதிலிங்கம், கந்தகம், கௌரிபாஷாணம், வெள்ளை பாஷாணம், மிருதார்சிங், சிலாஹித் ஆகியவைதான் அந்த ஒன்பது பொருட்கள்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இவைதான் பிரதானம்.

இது போக மேலும் பல வஸ்துக்களையும், மூலிகைகளையும் கலந்து திரவ நிலைக் குழம்பைக் கெட்டிப்படுத்தி திடப்பொருளாக மாற்றும் வித்தை போகருக்குத் தெரிந்திருந்தது.

போகரின் தலைமையில் 81 சித்தர்கள் ஒன்று சேர்ந்து, 81 வகையான வஸ்துக்களைக் கலந்து 9 கலவைகளாக்கிய பிறகு இந்தப் பாஷாணக்கட்டு செய்யப்பட்டது.

இந்தக் கலவைகளை 9 விதமான எரிபொருளைக் கொண்டு காய்ச்சி, 81 முறை வடிகட்டி சுத்தி செய்யப்பட்டதாக அவரது பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது.

அந்த பாஷாணக் கலவையில் லிங்கம், செந்தூரம், பாதரசம், ரச கற்பூரம், வெடி உப்பு, பாறையுப்பு, சவுட்டுப்பு, வாலையுப்பு, எருக்கம்பால், கள்ளிப்பால், வெண்காரம், சங்குப்பொடி, கல்நார், பூநீர், கந்தகம், சிப்பி, பவளம், சுண்ணாம்பு, சாம்பிராணி, இரும்பு, வெள்ளீயம், அரிதாரம், குன்றிமணி போன்ற பல்வேறு மூலிகைகள் பயன்படுத்தப்பட்டன.

இந்த வகை பாஷாணங்களைக் கலந்து



கலவையாகக் கட்டும் வரை அதைச் செய்பவர்கள் சுவாசிக்கக் கூடாது!

ஏனெனில் அவை அத்தனையும் கொடிய விஷத்தன்மையானவை.

இந்த சிலையை செய்த அத்தனை பேரும் மூச்சை உள்ளடக்கி சில மணி நாழிகைகள் வரை சுவாசிக்காமல் இவ்வளவு பெரிய பணியை போகரின் வழிகாட்டுதல் மூலம் செவ்வனே செய்து முடித்தார்கள் என்பதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் மலைப் பாகவே இருக்கிறது.

அத்தனை பேரும் எந்த அளவுக்குச் சித்தி பெற்று பிராணாயாமத்தைக் கடைப்பிடித்திருந்தால் இப்படியொரு அசாத்தியமான மூச்சையடக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்! இதற்கு அவர்கள் எத்தனைவிதமான கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இதுபோன்ற மூச்சை அடக்கும் வித்தையை கற்க அவர்கள் எத்தனைநாட்கள் செலவு செய்திருக்கவேண்டும்.

பாஷாணங்களை வைத்துக் கட்டப்பட்ட இந்தச் சிலை உஷ்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

அதனால் போகர் எழுதி வைத்துப் பின்பற்றி வந்த ஆறு கால பூஜைகளையும், செய்விக்க வேண்டிய அபிஷேகங்களையும் இன்று வரை மாற்றாமல் கடைப்பிடித்து வருகிறார்கள்.

இரவுகால பூஜைக்குப் பின் விக்கிரகத் திருமேனியில் அரைத்த சந்தனத்தைப் பூசிக் குளிர்வித்து விடுகிறார்கள்.

மறுநாள் காலை விளாப் பூஜை நடக்கும் வரை, ஏறத்தாழ 10 மணி நேரங்களுக்கு எந்த அபிஷேகமும் இல்லாதபோது விக்கிரகம் வெளிப் படுத்தும் உஷ்ணத்தை உறிஞ்சி விக்கிரகத் திரு மேனியைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள இந்தச் சந்தனக் காப்பு உதவுகிறது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பழனியாண்டவர் விக்கிரகத்தின் ஸ்திரத் தன்மையை அறியவும், அந்தச் சந்தனத்தில் என்னென்ன ரசாயனங்கள் தங்கியுள்ளன என்பதைக் கண்டறியவும் தமிழக கனிம வளக் கழகத்தின் அப்போதைய தலைவர் தலைமையில் விஞ்ஞானிகள் குழு ஒரு சோதனையை மேற்கொண்டது.

முதல் சந்தனத்தைக் கரைசலாக்கி அதை அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் என்ற கருவி மூலம் பரிசோதனை செய்தனர்.

மற்ற நேரங்களில் செய்விக்கப்பட்ட அபிஷேகப் பொருள்களில் என்னென்ன ரசாயனங்கள் தங்கின என்பதை இந்தக் கருவி மூலம் துல்லியமாகக் கண்டறிந்தனர்.

ஆனால் இரவுக்காலப் பூஜைக்குப் பின்சாற்றிய சந்தனத்தில் என்ன இருந்தது என்பதைப் பலமுறை, பரிசோதித்தும் கண்டறிய முடியவில்லை!

அதாவது, அந்தக் கரைசலின் மூலத்துகள்களை இன்னவென்று பகுத்தறிய முடியாமல் போனது எப்படி என்பது அக்குழுவினருக்கு மிகுந்த ஆச்சரியம்தான்!

இறைசக்திக்கு முன்பாக நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள் செல்லுபடியாகவில்லை என்பது இதில் நிரூபணமானது!

e-magazine
aanmeegamalar.com

# வைகுண்டத்தை அடைய உதவும் மரணகால செயல்கள்

ஒருவன் ஆகார வியவஹாரம் ஒன்றும் செய்யாமல்நியமத்தோடு தர்ப்பாசயனம் செய்து பகவானையே தியானித்துக் கொண்டு இறந்தால் அவன் வைகுந்தம் அடைவான். இதை பிரயோபவேசம் என்று கூறுவார்கள்.

'பிரயோபவேசம்' என்பதை எளிதாக யாராலும் செய்து விடமுடியாது, உயிரையும் உடலையும் கட்டுப்படுத்தும் திறன் உள்ளவர்களால் மட்டுமே இந்த பிரயோபவேசம் செய்ய முடியும். உயிரும் உடம்புமாக சொர்க்கம் புக செய்யப்படும் முயற்சி என்றும் சொல்லலாம்.

ஆனால் அதற்கு சரியான காரணம் இருக்கவேண்டும். சுயநல போக்கில் சொர்க்கத்தை அடைவதற்கான குறுக்கு வழியாக இந்த பிரயோப வேசத்தைப் பயன்படுத்தி விடக் கூடாது.

ஊர் வாழ, உலகு வாழ, சத்தியம், தர்மம் வாழ ஒருவர் தன்னுயிரை பலிபிரசாதமாக 'பிரயோப வேசம்' என்னும் பெயரில் அளிக்கலாம். தன் உயிரை மற்ற உயிர்களுக்காக தியாகம் செய்யப்படும்போது இறைவன் ஆசி அவர்களுக்கு பரிபூரணமாக இருக்கும்.



இந்த காரணங்கள் இல்லாமல் அவமானம் காரணமாகவோ, நோய் காரணமாகவோ ஒரு வர் சகிப்புத் தன்மையற்றுப் போய் பிரயோபவேசம் செய்தால் அது தற்கொலைக்கு சமமானதாகும்.

தற்கொலைக்கு உள்ளாகும் ஆத்மாக்கள் பஞ்சபூத கணங்களின் சேர்க்கையாலான உடம்பை பெறவே முடியாது. 'சுவேதம்' எனப்படும் ஒலியுடலை தான் பெற்றிடும். இந்த ஒலியுடம்பானது கோரமானதாக இருக்கும். மிருகக் கலப்புள்ள ஒரு உடலாக இவர்கள் உடல் அமைந்து விடும்.

மங்கலச் சின்னங்களும், வாத்தியங்களும் இவர்களுக்கு நாராசமாய்

e-magazine
aanmeegamalar.com

ஒலித்திடும். வேத மந்திரங்கள் இவர்களைநெருப் பாய் சுடும். பஞ்ச பூத சக்தி மிகுந்த இடங்களில் இவர்களால் திரிய முடியாது. இருள் சூழ்ந்தபகுதி கள், பிரேதங்களுக்கான இடங்கள், விஷவாயு சுரந்திடும் மரங்கள், வாஸ்து பலமில்லாத இடிந்த கட்டிடங்களே இவர்களின் இடமாகி விடும்.

எனவே உண்மைத் தன்மை உள்ள பிரயோப வேசம் பகவானுக்கு உகந்ததாகும். பிரயோபவேசம் செய்த நாட்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வேள்வி செய்த பலன் கிடைக்கும். அவன் உலகியலின் உண்மையையும், வாழ்வியலின் இரகசியத்தையும், தெய்வீக இயலின் மெய்ம்மையையும், உணர்ந்து இனி உயிர் வாழ்க்கை வேண்டியதில்லை என்று, இனி உடலை பிரிந்து விடுவோம் எனத் துணிந்து அதை நல்ல முறையில் பிரயோபவேசம் செய்து நல்லுலகை அடைவான்.

ஆன்மிகமலர்

விடு, மனைவி, மக்களை நெடுங்காலம் பிரிந்து, நெடுந்தூரம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் யாத்திரை செய்பவனுக்குப் பிரம்மாதி தேவர்களெல்லாம் வேண்டியவற்றைக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யும் ஒருவன் வழியில் மரித்தால் அவன் சுவர்க்கம் பெறுவான். மரண காலம் நெருங்கி விட்டதை உணர்ந்து, ஒருவன், விஷ்ணு க்ஷேத்திரம் ஒன்றில் மரிக்க எண்ணி யாத்திரை செய்ய நடந்தால், அவன் நடக்கும் அடி ஒன்றுக்கு ஒரு பசுவைத் தானம் செய்த பயனை அடைவான். தம்மவர்க்கு உதவி, அன்னியருக்கு உதவி செய்வதை விட தன் பெற்றோர்க்கு, உடன் பிறந்தோர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பது சிறப்புடைத்து, தந்தைக்குக் கொடுத்தல் உத்தம பிராமணனுக்குக் கொடுத்த தான புண்ணியத் தை விட நூறு மடங்கு கிடைக்கும். தாய்க்குக் கொடுத்தால் ஆயிரம் மடங்கு அதிகம். உடன் பிறந்த ஆண், பெண்களுக்குக் கொடுத் தலும் அளவற்ற புண்ணியம் தரும்.

நல்ல ஒழுக்கத்திலும்,நன்னெறி யிலும் ஒழுகி, உயிரினங்களி ருந்து உற்ற சமயத்தில் உதவி, பூதானம் செய்பவ னைக் கண்டு புவிமகள் மகிழ்ச்சி அடைவாள். பூதானம் செய்தவனும், புனலில் மூழ்கியவனும், பஞ்சாக்கினி நடுவில் இருந்து தவம் செய்தவனும், வேள்விளைச் செய்தவனும், போரில் புறமுதுகிடாமல் முன்னேறியவனும் இகத்திலும், பரத்திலும் இன்பம் அடைவான்.

அயோத்தி, காஞ்சி, மதுரை, மாயா, காசி, அவந்தி, துவாரகா ஆகிய ஏழில் ஒன்றில் மரித் தால் நிரதிசய இன்ப வீடடைவான். சந்நியாசம் பெற்றவன், விஷ்ணு பக்தி செய்பவன், ஸ்ரீராம, கிருஷ்ண நாம உச்சாடனம் செய்வோர், அவ்வாறு செய்து கொண்டே இருக்கையில் மரித்தால் பேரின்ப வீடு அடைவர்.

திருத்துழாய் பயிரிட்டவன், அதற்கு நீர் பாய்ச்சியவன் நல்லுலகடைவான். ஆபத்திலுள்ள பசு, குழந்தைகளைத் தன்னுயிரைக் பணயம் வைத்த காப்பாற்றுபவன் தேவர்கள் எதிர்கொள்ள சுவர்க்கம் அடைவான். ஸ்ரீரங்கம், காசி, குருக்ஷே ஷத்திரம், பிருகு க்ஷேத்திரம், பிரபாசதீர்த்தம், காஞ்சி, புஷ்கரம், பூதேஸ்வரம் ஆகிய புனித நகரங்களில் மாண்டவன் மோட்சமடைவான். வேத சாஸ்திரங்களை உணர்ந்தவர், கன்னிகை, பூமி, கிருகம், பசு, திலம், யானை, தானம் கொடுத்தோர், கிணறு, நடைவாவி, குளம், ஆலயங்களை புதுப்பித்தோர் இவற்றைத் தோற்றுவித்தோரைக் காட்டிலும் அதிக புண்ணியம் பெற்று விண் ணுலகடைவர்.



aanmeegamalar.com e-magazine

# குழந்தைகள் பிறப்பும்? முன்னோர் அறிவியலும்!







திருமணமான தம்பதியர்கள் தங்களின் வம்ச விருத்தி செய்ய முனைப்பு காட்டுவார்கள், அந்த வகையில் தம்பதியரின் சேர்க்கைக்குப் பின் கருவறையில் ஒரு குமிழியுண்டாகும்.

பதினான்கு நாட்களில் தசைகளும், இருபதாவது நாளில் மேலும் தசை அதிகமாகும்.

இருபத்தைந்தாவது நாளில் புஷ்டி அடையும்.

ஒரு மாதத்தில் பஞ்சபூத சேர்க்கை உண்டாகும்.

2ஆவது மாதத்தில் தோல், 3ஆம் மாதத்தில் நரம்புகள் உண்டாகும். 4ஆம் மாதத்தில் மயிர் புறவடிவம் ஏற்படும். 5இல் காது, மூக்கு, மார்பு தோன்றும். ஆறில் சிரம், கழுத்து, பற்கள் உண்டாகும். 7இல் பாலின் குறி தோன்றும். 8இல் அனைத்து அவயவங்களுடன் ஜீவன் பிரவேசிக்கும். 9இல் சுழிமுனை நாடி மூலம் பூர்வ ஜன்ம கர்மம் அறியும். பத்தில் குழந்தை பிறக்கும்.

பஞ்ச பூதாத்மகமாகிய உடல், பஞ்சேந்திரியங்களை அடைந்து இடை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று முக்கிய நாடிகளும், காந்தாரி, கஜசிம்மஹி, பூழை, அச்சு, அலாபு, குரு, விசாகினி என்ற ஏழுநாடிகளும் உடலில் முக்கியமானவை பெற்று தசவித வாயுக்கள் சேர்ந்துள்ளது.

இந்தச் சரீரம், சுக்கிலம், எலும்பு, நீர், ரோமம், இரத்தம் ஆகிய ஆறு கோசங்கள் கொண்டது. உண்ணுகின்ற உணவின் சாரம் உடலில் பரப்புவது வாயு இவ்வாறு அண்டத்திலுள்ளவையெல்லாம் பிண்டத்திலுமுண்டு. பிண்டத்திலுள்ளவை எல்லாம் மனித உடலில் உள்ளன.

மனித உடலில் பதினான்கு உலகங்கள். சப்த குலாசலங்கள், தீவுகள், நவக்கிரகங்கள் இருக்கின்றன. ஒருவன் ஆயுள் அவனுடைய பூர்வ ஜன்ம கர்மானுசாரத்தை அனுசரித்து கருவிலுள்ள போதே பிரமன் நிச்சயித்து விடுகிறான். எனவே தீர்க்க ஆயுளும், உயர்ந்த வித்தையும், யோகமும், மற்ற யாவும் மறு ஜன்மத்திலாவது ஒருங்கே பெற்றிட ஜீவன் நற்கர்மங்களைச் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# கனவில் அம்மன் தோன்றினால் என்ன பலன்!



கனவுகள் சில நேரங்களில் வினோதமாக இருக்கும். நாம் வாழும் உலகில் இதுவரை கண்டிராத இடங்கள், தெரியாத முகங்கள் மற்றும் புதுமையான சூழல்கள் ஆகியவை சிலருடைய கனவில் அடிக்கடி தோன்றும் சாத்தியம் உள்ளது. பொதுவாக நாம் காணும் எல்லா விதமான கனவுகளுக்கும் பலன் உண்டு என்று சொல்லிவிட முடியாது. ஆனால், குறிப்பிட்ட சில நேரங்களில், நாம் ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும்போது வரும் கனவுகளுக்கு நிச்சயம் பலன் உண்டு.

ஆன்மிகமலர்

இரவு 1 மணி அளவில் நீங்கள் காணும் கனவுஒரு வருடம் கழித்து பலிக்கும்.



இரவு 2 மணிக்கு கனவு வந்தால் இன்னும் 6 மாதத்தில் பலிக்கும்.

அதிகாலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும் என்று ஜோதிட சாஸ்திரத்தில் தெளிவாக கூறியுள்ளது.

பொதுவாக, அனைவரது கனவிலும், பொன், பொருள், தீய செயல்கள், மிருகங்கள், பறவைகள் கனவாக வருவதைப் பார்த்திருப்போம், ஆனால் ஒருசிலருக்கு கடவுளே கனவில் தோன்றுவார்கள், அவ்வாறு கனவில் கடவுளாக வரும்போது ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு பலன் ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த வகையில் அம்மன் கனவில்வந்தால் என்ன பலன் என்பதைப் பற்றி பார்ப்போம்.

## கனவில் அம்மன் தோன்றினால் என்ன பலன்!

உங்கள் கனவில் பொதுவாக அம்மன் தோன்றினால் உங்கள் வாழ்க்கையில் சில நன்மை தரக் கூடிய நிகழ்வுகள், செய்திகள் உங்களை நோக்கி விரைவில் வரவிருக்கிறது என்று பொருள், அதிலும் குறிப்பிட்ட அம்மன் வடிவங்கள் வரும்போது அந்த வடிவத்திற்கேற்ப



பலன் அமையும். அந்த வடிவம் என்ன என்பதை பார்ப்போம்.

## லட்சுமி தேவி

கனவில் லட்சுமி தேவியைக் கண்டால், வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்து, வாழ்க்கையில் பண மழை பெய்யும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். லட்சுமி தேவியின் கருணை உங்களை ஆட்கொள்ளவிருக்கிறது என்று பொருள்.

## பார்வதிதேவி

உங்கள் கனவில் பார்வதி தேவியை கண்டால், உங்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைக்கும் அல்லது தொழிலில் பெரிய வெற்றியை பெறலாம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். வியாபாரி களுக்கு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

## சிவப்பு நிற ஆடையில் துர்க்கை தேவி

அன்னை துர்கா சிவப்பு நிற ஆடையில் உங்க ளுக்கு கனவில் தோன்றி, அதே சமயம் முகத்தில் புன்னகையுடன் தோன்றினால், உங்கள் வாழ்வில் ஏதாவது மங்களகரமானது நடக்கும் என்று அர்த்தம். நீங்கள் வழிநடத்தும் எந்தத் துறையிலும் அல்லது நீங்கள் பின்பற்றும் இலக்கிலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று அர்த்தம். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு விரைவில் குழந் தைப் பேறு கிடைக்கும் என்பதையும் உணர்த்தும்.

## துர்கா தேவியின் சிங்க வாகனத்துடன்

அன்னை துர்கா கனவில் சிங்கத்தின் மீது சவாரி செய்தால், அது மிகவும் மங்களகரமான அடையாளமாக கருதப்படுகிறது. இந்த கனவு உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் மேலும் துர்கை தேவியின் அருளுக்கு தாங்கள் தகுதியானவர் என்பதையும், உங்கள் பக்தியின் மீது அன்னை மகிழ்வதாகவும் அர்த் தம். துர்க்கையின் ஆசீர்வாதமும், அருளும் உங்கள் மீது மழையாக பொழியும் என்றும் அர்த்தமாகும்.

ஆன்மிகமலர்.காம்

## துர்கா தேவி கருப்பு உடையில் காட்சி தந்தாள்

துர்கா தேவி கருப்பு உடையில் உங்கள் கனவில் வந்தால், வாழ்க்கையில் சில சிரமங் களை சந்திக்க நேரிடும் என்று அர்த்தம். எனவே நீங்கள் இந்த அடையாளத்தை தீவிர மாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

நீங்கள் சரியான பாதையில் நடக்க ஆரம்பித்து, உங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தொடங்க வேண்டும் என்ற எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும், அவ் வாறு தங்களை மாற்றிக் கொள் ளும்போது எளிதாக அம் மனின் அரு ளுக்கு நீங்கள் பாத்திர மாவீர்கள் என்பதை உணர்த்து வதற்கான அம்மனின் அறிகுறியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.



# சரணாகதி

## இறைவனே கடைப்பிடிக்கும் சங்கல்பம்

e-magazine
aanmeegamalar.com



பகவானை அடைவதற்கு இரண்டு மார்க்கங்கள் உண்டு. ஒன்று பக்தியோகம் மற்றொன்று சரணாகதி. எப்போதும் பகவத் சிந்தனையில் லயித்திருந்து பகவானை அடைவது பக்தி யோகம். ஆனால், இது எல்லோருக்கும் சாத்தியம் இல்லை!

ஜன்ம ஜன்மமாகக் கடைப்பிடிக்க வேண்டியதும் இருக்கும். உதாரணமாக இந்த ஜன்மத்தில் பக்தியோகத்தைத் தொடங்கி மறுபிறப்பு அடைந்தால், மறுபிறப்பிலும் நமக்கு அது நினைவில் இருக்கவேண்டும். பக்தியோகத்தைத்தொடர வேண்டும். அப்போதுதான் மோட்சம் கிடைக்கும் என்பார்கள் பெரியோர்கள்.

ஆன்மிகமலர்

ஆனால் சரணாகதி (பிரபத்தி) அப்படி அல்ல. சரணாகதி செய்துவிட்டால் இந்த ஜன்மத்திலேயே மோட்சம் நிச்சயம் என்கிறார்கள் ஆசார்யர்கள். சரணாகதி செய்ய ஆண், பெண், குலம் என எந்தத் தடையும் இல்லை. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சரணாகதி செய்யலாம். ஒருமுறை பெருமாளிடம் சரணாகதி செய்துவிட்டால் அவர் நம்மைப் பார்த்துக்கொள்வார். பெருமாளின் கல்யாண குணங்களில் இதுவும் ஒன்று.

பக்தியோகத்தில் ஈடுபடும் ஒருவர் மரணிக்கும் தறுவாயில் பகவத் சிந்தனையில் இருக்க வேண்டும். இல்லையெனில் மோட்சம் கிடைக்காது. ஜடபரதர் என்னும் ஞானி மரணிக்கும்போது மானை

நினைத்துக்கொண்டார்; மானாகப் பிறந்தார் என்ற தகவல் உண்டு. ஆனால் சரணாகதியில் இந்தப் பிரச்னை இல்லை.

சரணாகதி செய்துவிட்டவர், இறுதிக்காலத்தில் பகவானை நினைக்க முடியாமல் நினைவிழந்த நிலையில் இருந்தாலும் பெருமாள் அவரைத் தன் பாதத்தில் சேர்த்துக்கொள்வார். எனவே, சரணாகதியே பகவானை அடைய உதவும் மார்க்கங்களில் மிகவும் எளிமையானது, உயர்ந்தது.

எனவேதான் பரம பாகவதனான விபீஷணன் ஸ்ரீராமரைத் தேடி வந்தார். தன் மனைவியையும் மகளையும் துறந்து, தன் சொத்துகளையும் அதிகாரத்தையும் விட்டுவிட்டு இந்த உலகின் என்றும் அழியாத உயர்ந்த செல்வமான ராமரை நாடிச் சரணாகதி செய்ய வந்தார். அப்போது சமுத்திரத்தின் மறுகரையில் பாதுகாப்புக்காக நின்ற வானரங்கள், விபீஷணனைத் தடுத்து நிறுத்தி, ``யார் நீ?'' என்று கேட்டன.

அதற்குப் பதில் சொல்லும் விபீஷணன், ``கொடிய ராட்சசனான ராவணனின் தம்பி நான்'' என்று சொன்னார்.

``இங்கே எதற்காக வந்தாய்?'' என்று கேட்டன வானரங்கள்.

``ராகவனிடம் சரணாகதி செய்ய வந்தேன்'' என்றார் விபீஷணன்.

உடனே குரங்குகள், ``இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்க, அதற்கு விபீஷணன், ``இப்போதே சென்று ராமரிடம் சொல்லுங்கள்'' என்றார்.

ஏன் `இப்போதே சொல்லுங்கள்' எனச் சொன்னார் என்றால், சரணாகதி செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால், காலம் தாழ்த்தக் கூடாது. உடனே செய்துவிட வேண்டும். அதனால்தான் விபீஷணர் அப்படிச் சொன்னார் என்பார்கள் பெரியோர்கள். வானர வீரர்கள் செய்தியைச் சொல்ல வந்தபோது, சுக்ரீவன் உள்ளிட்டவர்களோடு ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார் ராமர். வானரர்கள் விபீஷணனின் வருகையைச் சொல்லின. ராமரோ, `உடனே வரச் சொல்லுங்கள்' என்று சொல்லவில்லை.

தன்னோடு இருப்பவர்களின் கருத்தை அறிந்து பின்பு சொல்லலாம் என்று நினைத்தார். சுக்ரீவனிடம், ``நாம் விபீஷணனை ஏற்றுக் கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

அதற்கு சுக்ரீவன், ``சுவாமி, கஷ்ட காலத்தில் தன் சொந்த அண்ணனை விட்டுவிட்டு வந்தவன் நல்ல தம்பியாக இருக்க முடியுமா? அவன் நம்மிடம் இருக்கும் தனத்தைப் பறிக்க வந்திருக்கிறான் என்றே எனக்குத் தோன்றுகிறது.



e-magazine
aanmeegamalar.com

எனவே கெட்டவனான விபீஷணனை அங்கீகாரம் செய்யக் கூடாது'' என்றான்.

ராமர் மாருதியைப் பார்த்து, ``உன் கருத்து என்ன மாருதி?'' என்று கேட்டார். நவ வியா கரண பண்டிதனான மாருதி நயமுடன் பேசத் தொடங்கினார்.

``சபையில் உள்ள பெரியவர்கள் எல்லோரும் தங்கள் கருத்தைப் பேசிவிட்டனர். நான் சிறியவன். என் கருத்தைக் கூறுகிறேன். தவறாக இருந்தால் மன்னித்துவிடுங்கள்.

அடியேனைப் பொறுத்தவரை விபீஷணன் கெட்டவனாக இருக்க முடியாது. ஒட்டு மொத்த இலங்கையிலும் உள்ள ராட்சதர்கள் அனைவரும் என்னைக் கொல்ல வேண்டும் என்று சொன்னபோது, தர்ம சாஸ்திரத்தை எடுத்துச் சொல்லி, தூதுவனைக் கொல்லக் கூடாது என்று எடுத்துரைத்தவர் விபீஷணன். அப்படியானால் அவர், `தர்மத்துக்கு எதிரான சகலத்தையும் கேள்விகேட்கும் தைரியம் உடையவர்' என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

நான் சீதாப்பிராட்டியிடம் பேசும்போது, `எனக்குத் திரிசடை என்பவள் நல்ல வார்த்தை சொன்னாள்' என்றார். திரிசடை விபீஷணனின் பெண். பெண்ணே அவ்வளவு நல்லவள் என்றால், விபீஷணன் கெட்டவராக இருக்க முடியுமா...

சீதை ராவணிடம் பேசும்போது, `இலங்கையில் உனக்கு நல்லவற்றை எடுத்துச் சொல்ல நாலு நல்லவர்கள் இல்லையா' என்று கேட்டார். அடுத்த நொடியே, `அப்படியே இருந்தாலும் நீ அவர்கள் சொல்வதைக் கேட்கவா போகிறாய்' என்றார். அன்னை சீதாப்பிராட்டி அப்படிக் கேட்டதற்குக் காரணம் அவர் விபீஷணன் இலங்கையில் இருப்பதை நினைத்துக்கொண்டதுதான்.

விபீஷணன் இங்கு வந்து நம்மிடம் கொள்ளை யிட்டுப்போக சொத்து எதுவும் நம்மிடம் இல்லை. அவரோ தன் சகல சொத்துக்களையும் விட்டு விட்டுதான் இங்கே வந்திருக்கிறார்.

ஒருவேளை நாம் கடலைக் கடந்து சென்றி ருந்தால் அதைக் கண்டு வியந்து நம் மேல் பயம் கொண்டு நம்மிடம் பணிந்துபோக வந்திருக் கலாம். ஆனால், நாம் இன்னும் கடலையே கடக்கவில்லை. எனவே அவர் பயம் கொள்ளவும் அர்த்தமில்லை.

என்னைப் பொறுத்தவரை, `அவர் மிகவும் நல்லவர்' என்பதில் சந்தேகம் இல்லை. அவரை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்பதுதான் என் தாழ்மையான கருத்து'' என்று எடுத்துரைத்தார் அனுமன். இதைக் கேட்ட ராமரின் முகம் மலர்ந்தது. பேச ஆரம்பித்தார் ராகவன்.

``சுக்ரீவா! நீ விபீஷணன் கெட்டவன். அவனை அங்கீகாரம் செய்யக் கூடாது என்கிறாய். ஆனால் அனுமனோ, அவன் நல்லவன். அங்கீகாரம் செய்ய வேண்டும் என்கிறான். என் முடிவு என்ன தெரியுமா... நீ சொன்னது போல் அவன் கெட்டவனாகவே இருந்தாலும் நான் அவனுக்கு அங்கீகாரம் பண்ணுவேன்'' என்றார்.

**ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்**
**மீதி ஸ யாசதே**
**அபயம் சர்வ பூதேப்யோ ததாம்**
**யேதத் வ்ரதம் மம'**

– ராமர் சரம ஸ்லோகம்.

`எவன் ஒருவன் பகவானிடம், நான் உன்னு டையவன் என்று சொல்லி ஒருமுறை சரணாகதி செய்துகொள்கிறானோ, அவனுக்குப் பயம் இன்மையைக் கொடுப்பேன் என்று சங்கல்பம் கொண்டவர் பகவான்' என்கிறது இந்த ஸ்லோகம். பகவானின் விரதமே தன்னை சரணா கதி செய்பவர்களைக் காப்பதுதான்.

ஆன்மிகமலர்

அப்படியிருக்க தன்னை நாடி, `சரணாகதி' என்று வந்திருக்கும் விபீஷணனை பெருமாள் அங்கீகாரம் செய்யாமல் விடுவாரா?

ஆனாலும் சுக்ரீவனோடு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறபடியால், அவன் மனதை யும் புண்படுத்தக் கூடாது என்று நினைத்துச் சில விளக்கங்களை அவனுக்குச் சொல்லலானார் ராமர்.

``சுக்ரீவா! நான் உனக்கு ஒரு நிகழ்வைச் சொல்கிறேன். காட்டில் வேடுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வேட்டைக்குச் செல் லும்போது இரண்டு பட்சிகள் மரத்தில் நிற்பதைப் பார்த்தான். அதில் பெண் பட்சியை அம்பெய்திப் பிடித்துக்கொண்டு தன் இல்லம் கொண்டு சென்று சமைத்து உண்டான். தன் இணையை இழந்த ஆண் பட்சி மிகுந்த வருத்ததோடு இருந்தது.

மீண்டும் இரவு வேட்டைக்கு வந்தான் வேடன். ஆனால் வேட்டையாக எதுவுமே கிடைக்க வில்லை. பகலில் எந்த மரத்தில் இருந்த பட்சியை வேட்டையாடினானோ அதே மரத்தின் அடியில் வந்து நின்றான். குளிர்காற்று கடுமையாக வீசியது. குளிரில் நடுங்க ஆரம்பித்தான்.

சுற்றியிருந்த சுள்ளிகளையும் சருகுகளையும் எடுத்துவந்து நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்தான்.



அந்த மரத்தின் மேலே இருந்த ஆண் பட்சி இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது.


வேடுவன், குளிரில் நடுங்குவதோடு பசியிலும் தவிப்பதைப் புரிந்துகொண்டது ஆண் பட்சி. அப்போது அந்தப் பறவை நினைத்ததாம், `நாம் வசிக்கும் மரத்தை நாடி வந்த ஒருவர் பசியில் தவிக்கலாமா. உரிய முறையில் விருந்தோம்பல் செய்ய வேண்டியது நம் கடமை அல்லவா' என்று நினைத்ததாம். உடனே அவன் மூட்டிய நெருப்பில் வீழ்ந்து அவனுக்கு உணவானது.

இந்த நிலை தான் எனக்கும் சுக்ரீவா. அந்த மரம்தான் நான் இருக்கும் இடம். அந்த ஆண் பட்சிதான் நான். பெண் பட்சிதான் சீதை. வேடுவன் பறவையைக் கொன்று தின்றான். ராவணனோ சீதையைக் கவர்ந்துசென்றான். கதையில் அந்தக் கொடூரமான வேடுவனே திரும்பி அந்த மரத்தின் அடியில் வந்து நின்றான். ஆனால் இங்கோ அந்தக் கெட்ட ராவணனின் தம்பியான நல்லவனான விபிஷணன் வந்திருக்கிறான்.

அந்த வேடுவன் தனக்குப் பசிக்கிறது என்று வாய் திறந்து சொல்லவில்லை. ஆனால் அதைப் புரிந்துகொண்டு அந்த ஆண்பட்சி தன்னையே அவனுக்குத் தந்தது. ஆனால் என்னை நாடி, `சரணாகதி செய்ய வந்திருக்கிறேன்' என்று வாய் திறந்து சொல்லி நிற்கும் விபீஷணனை நான் அங்கீகரிக்கவில்லை என்றால் அந்த ஆண் பட்சிக்கு இருந்த மனம்கூட எனக்கு இல்லையே என்கிற இழுக்கு நேரும் அல்லவா...'' என்றார்.

சுக்ரீவனுக்கு ராமர் சொன்ன நிகழ்வும் அதன் உட்பொருளும் முழுமையாகப் புரிந்ததா என்று தெரியவில்லை. அவன் ராமரின் திருமுகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265



e-magazine malar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

172 க்கும் மேற்பட்ட இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# காசியில் விநாயகப் பெருமானின் வழிபாட்டுத் தலங்கள்



சிவபெருமான் மந்தாராச்சலில் இருந்தார், காசியை திவோதாஸ் என்ற மிகவும் பக்தியும் ஆன்மீகமும் கொண்ட மன்னன் ஆட்சி செய்தான். அவருடைய ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள், எல்லா இடங்களிலும் செழிப்பு இருந்தது.

தான் ஆட்சி செய்யும் வரை, தேவர்களும் கடவுள்களும் காசியை விட்டு விலகி இருக்க வேண்டும் என்றும், காசியில் எந்தக் குழப் பத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்றும், பிரம்ம தேவனிடம் ஒரு புரிந்துணர்வு புரிந்தார்.

பிரம்மதேவன் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் திவோதாஸ் மன்னன் தன்னை ஒரு சிறந்த மற்றும் திறமை யான நிர்வாகியாக நிரூபிக்க வேண்டும் மற் றும் காசியில் வசிக்கும் அல்லது காசிக்கு வரும் மக்கள் அனைவரும் தங்கள் ஆன்மீக விஷயங் களில் நன்றாக நடத்தப்பட வேண்டும். அதற்கு சம்மதித்த மன்னன் அதற்கேற்ப சிறப்பான ஆட்சியை அளித்தான்.

ஆன்மிகமலர்

நீண்ட நாட்களாக காசியை விட்டு விலகி யிருந்ததால் மிகவும் வருத்தமடைந்த சிவ பெருமான், திவோதாஸ் மன்னன் ஏதாவது தவறு செய்ய விரும்பினார். அதன்படி, அவர் அறுபத்து நான்கு யோகினிகளை சில இடையூறுகளை உருவாக்க அனுப்பினார், ஆனால் அவர்கள் சொர்க்கத்தின் ஒரு பகுதியாகத் தோன்றிய காசியின் அழகு மற்றும் அமைதியான சூழ லால்




e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





தவறும் காண முடியவில்லை. சூரிய பகவானும் காசி மற்றும் நகரத்தின் அழகின் மீது மிகவும் ஈர்க்கப்பட்டார். சிவபெருமானின் விருப்பத்தை நிறைவேற்றாமல் மீண்டும் மந்தாராச்சலத்திற்குச் சென்றால், சிவபெருமானுக்கு கோபம் வரும் என்று சூரிய பகவான் நினைத்தார்.

சூரிய பகவான் இறுதியாக காசியில் தங்க முடிவு செய்தார். சிவபெருமானின் கட்டளைகளை மீறுவது பாவம், ஆனால் காசியில் தங்கி சமய காரியங்களை மேற்கொள்வதால் அத்தகைய பாவங்கள் எளிதில் தீர்ந்துவிடும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அதன்படி சூரிய பகவான் காசியின் பல்வேறு இடங்களில் தனக்கான பன்னிரண்டு வடிவங்களை உருவாக்கினார்.

பின்னர் சிவபெருமான் இப்பணிக்காக சிவ கணங்களை அனுப்பினார். அவர்களும், காசியின் அழகில் மயங்கி அங்கேயே தங்க முடிவு செய்தனர். இறுதியாக, சிவபெருமான் தனது மகனான விநாயகப் பெருமானை வரவழைத்து, திவோதாஸ் மன்னரின் ஆட்சியில் இடையூறுகளை உருவாக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் காசிக்கு அனுப்பினார்.

விநாயகப் பெருமான் காசியை அடைந்து பழைய ஜோதிடர் போல் மாறுவேடமிட்டுவந்தார். அவர் மக்களை சில நிகழ்வுகளைக் கனவு காணச் செய்தார், காலையில் அத்தகைய நபர்களைப் பார்வையிட்டார் மற்றும் கனவுகளையும் அவற்றின் விளைவுகளையும் விளக்கி அவர்களைப் பாதித்தார்.

அவர்களின் ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளை அவர் பயமுறுத்தும் வகையில் விளக்கவும் தொடங்கினார். இதனால் பலரை காசியை விட்டு ஓடச் செய்தார்.

காலப்போக்கில், அவர் மன்னரின் அரண்மனைக்குள் நுழைந்தார் மற்றும் அங்குள்ள பெண்களின் நம்பிக்கையைப் பெற முடிந்தது. நாட்கள் செல்ல செல்ல ராணியை கவர்வதிலும் வெற்றி பெற்றார், அவர் பழைய ஜோதிடரின் மகத்துவத்தைப் பற்றி ராஜாவிடம் கூறினார், மேலும் ராஜா அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தார். அரசனின்

e-magazine
aanmeegamalar.com




அனுமதியைப் பெற்ற ராணி பழைய ஜோதிடரை வரவழைத்தாள்.

அரசர் ஜோதிடரை மிகவும் பணிவோடு வரவேற்றார், பிந்தையவர் வழக்கமான நடைமுறையின்படி மன்னரை ஆசீர்வதித்தார். மன்னர் ஜோதிடரிடம் எதிர்காலத்தைக் கணிக்கச் சொன்னார். ஜோதிடர் ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, ராஜா மற்றும் ராஜ்யத்தைப் பற்றி பல்வேறு விஷயங்களைக் கூறினார். அன்றைய தினம் தொடங்கி, பதினெட்டாம் நாளில் ஒரு பிராமணர் வந்து அவருக்கு (அரசனுக்கு) சில தீவிர ஆலோசனைகளை வழங்குவார் என்றும் அவர் கூறினார். இதைச் சொல்லிவிட்டு ஜோதிடர் வெளியேறினார்.

ஏதோ ஒரு வகையில் விநாயகர் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி காசியில் வெவ்வேறு வடிவங்களில் பல்வேறு இடங்களில் குடியேறினார்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178



# திருமணத்திற்கு முன்பும் பின்பும் கடைபிடிக்கவேண்டிய

# அஷ்ட மூர்த்தி தரிசன வழிபாடு



சப்தஸ்தானம் என்ற முறையில் ஒரு திருக்கோயிலைச் சுற்றியுள்ள ஏழு கோயில் மூர்த்திகளை தரிசனம் செய்து வழிபடுகிறோம் அல்லவா?

அதே போல ஒரு திருத்தலத்தைச் சுற்றி எட்டு முறை வழிபடும் அஷ்ட மூர்த்தி தரிசன வழிபாடு என்ற முறையையும் நம் முன்னோர்கள் வகுத்துத் தந்துள்ளனர். இத்தகைய திருத்தலங்களில் ஒன்றாக திகழ்வதே ஸ்ரீகாசி விஸ்வநாதர் திருத் தலாமாகும்.

இம்முறையில் ஸ்ரீகாசி விஸ்வநாதரை தரிசனம் செய்து விட்டு ஸ்ரீரங்க நாதப் பெருமாளை தரிசிக்க வேண்டும். தொடர்ந்து காசி விஸ்வ நாதரை மீண்டும் தரிசனம் செய்து விட்டு திரு வெள்ளறை ஸ்ரீவடஜம்பு நாதரைத் தரிசித்தல் வேண்டும்.

தொடர்ந்து ஸ்ரீபுண்டரீகாக்ஷப் பெருமாளை தரிசனம் செய்து அதன் பின் மீண்டும் ஸ்ரீவட ஜம்பு நாதரை தரிசித்தல் வேண்டும். மூன்றாம் கட்டமாக திருஆனைக்காவில் அருள்புரியும் ஸ்ரீஜம்புநாதரை தரிசித்த பின்னர் மீண்டும் ஸ்ரீகாசி விஸ்வநாதரை தரிசித்து வழிபாட்டை நிறைவு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆறு முறை சிவ மூர்த்திகளையும் இரண்டு முறை பெருமாள் மூர்த்திகளையும், மொத்தத்தில் எட்டு மூர்த்திகளை ஒரு சேர வழிபடும் முறையே அஷ்ட மூர்த்தி தரிசன வழிபாடு என்று முற்காலத்தில் போற்றப்பட்டது. இவ்வழிபாடு மூன்று நிலைகளில் மேற் கொள் ளப்படுவதால் வில்வதள யாத்திரை வழிபாடு எனவும் வழங்கப்படுகிறது.

ஆன்மிகமலர்



ஸ்ரீரங்கம் காசி விஸ்வநாதர் திருத்தலத்தில் நவகிரக மூர்த்திகள் எண்கோண பீடத்தில் எழுந் தருளி உள்ளதால் இத்தலத்தில் அஷ்ட மூர்த்தி தரிசன வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது.

பெண்களுக்கு ஒரு சிறந்த வரப் பிரசாத மாகத் திகழ்வதே இத்தகைய வில்வதள யாத் திரை வழிபாடாகும்.

இவ்வழிபாட்டில் சுக்ர சக்திகளும், சந்திர சக்திகளும், பெண்களின் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமான தீர்த்த சக்திகளும் நிறைந்து விளங்குவதால் பெண்களுக்கு உரிய ஒரு சிறப் பான வழிபாடாக இது அமைகிறது.

முடிந்த மட்டும் பாத யாத்திரையாக இந்த வழி பாட்டை மேற் கொள்வதால் சிறந்த பலன்களைப் பெறலாம். காசி யாத்திரையை மேற்கொள்வோர் யாத்திரைக்கு முன்னும் பின்னும் ராமேஸ்வரம், தனுஷ்கோடி யாத்திரையை நிறைவேற்ற வேண்டும் என்ற நியதி இருப்பதைப் போல, திருமணத்திற்கு முன்னும் பின்னும் இத்தகைய அஷ்ட மூர்த்தி வழிபாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நியதியையும் நமது முன்னோர்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

அதாவது, திருமணத்திற்கு முன் ஒரு மண்டல மான 48 நாட்களுக்குள்ளும், திருமணத்திற்குப் பின் ஒரு மண்டல காலத்திற்குள்ளும் தம்பதி சகிதமாக இத்தகைய வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் என்பது நியதி.

திருமண முகூர்த்த நேரங்களைக் கணிக் கும்போது ஏழாம் இடம் சுத்தமாகவும் எட்டா மிடம் தீய கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ



பெறாமல் இருக்க வேண்டும் என்பது ஜோதிட விதி.

முறையாக இவ்வாறு கணிக்கப்படாத திருமண முகூர்த்தங்களில் விளைந்த தோஷங்களுக்கும், குரு, சுக்ர மூடம் பார்க்காமல் நிகழ்ந்த தோஷ விளைவுகளுக்கும் ஓரளவு பிராயசித்தம் அளிக்க வல்லதே இந்த வழிபாடுகளாகும்.

பெண்கள் ஜாதகத்தில் எட்டாமிடம் மாங்கல்ய ஸ்தானமாக விளங்குவதால் இத்தகைய வில்வ தள வழிபாடு அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான சந்ததியையும், சுபமங்கள, மாங்கல்ய சக்திகளையும் பெற்றுத் தரும்.

# சீடர்கள் என்ற குருதேவர்கள்



இந்தியர்களை பொறுத்தவரை தங்களது சொந்த நாட்டை பற்றிய வரலாற்று அறிவும் பண்பாட்டு தெளிவும் முழுமையாக பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல இயலாது. பாரத நாட்டின் வரலாற்றை பற்றி விரிவாக பேசும் போது விஷயம் தெரிந்தவர்கள் கூட வேத காலம் பௌத்த ஜைன மதங்களின் காலம் மௌரிய பேரரசு குப்தர் பேரரசு என்று பேசுவார்கள் சற்று ஆழமாக விஷயம் தெரிந்தவர்கள் ராஷ்டிர கூடர்கள் சாளுக்கியர்கள் சேர, சோழ, பாண்டிய விஜயநகர அரசுகளை பற்றி தெரிந்து வைத்திருப்பார்கள்.

ஆனால் மொகலாய சாம்ராஜ்யம் அதன் அரசர்கள் ஆங்கில கவர்னர் ஜெனரல்கள் போன்றவர்களை பற்றி மிக அதிகமாகவே அறிந் திருப்பார்கள்.

காரணம் நம் நாட்டு மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இருநூறு வருஷகாலமாக அந்நியர்களை பற்றி அவர்களின் மாட்சிமைகளை பற்றி போதனை நடத்த படுகிறதே தவிர சொந்த மண்ணை பற்றிய விவரங்கள் தெரிவிக்க படுவது கிடையாது.

இன்னும் சொல்ல போனால் இந்தியாவின் சிறப்புகளை யாரவது தெளிவாக எடுத்து

சொன்னால் அவர்களுக்கு பழமைவாதிகள் பிற் போக்கு வாதிகள் என்ற பட்டங்களை கொடுத்து வாய்மூட செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் நடக்குமே தவிர நமது சுய பெருமையை காது கொடுத்து கேட்க கூட அதிகம் பேருக்கு ஆர்வம் கிடையாது.

வரலாறு பற்றிய அறிவிலேயே இத்தகைய குறைபாடுகள் என்றால் இந்திய சமயங்களை பற்றிய அறிவில் பலபேருக்கு அக்கறையே இல்லை என்று தெளிவாக சொல்லலாம். ஒரு சமயம் தமிழகத்தில் புகழ் பெற்ற அரசியல்வாதி ஒருவரின் மேடை பேச்சை கேட்க நேரிட்டது. அவர் தமது உரையில் இந்தியாவில் ஹிந்து, முஸ்லிம், கிருஸ்தவம் ஆகிய மூன்று மதங்கள் மட்டுமே இருக்கிறது அந்த மதங்களை பின்பற்றுவர்கள் மட்டுமே வாழ்கிறார்கள் என்று சொன்னார்.


நாட்டை ஆளுகின்ற வாய்ப்பு கிடைத்த ஒரு மனிதர்க்கே இத்தகைய குறைவான விஷய ஞானம் இருக்கும் போது சாதாரண மக்களை பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

பேராசிரியர்கள் வரலாற்று ஆய்வாளர்கள் போன்றோரை அணுகி இந்திய மதங்களை பற்றிய விவரங்களை தாருங்கள் என்றால் அவர்களும் கூட மேற்குறிப்பிட்ட மூன்று மதங்களை பற்றிய தகவல்களை மட்டுமே தருவார்கள். இஸ்லாம் மதமும் கிருஸ்தவ மதமும் இந்தியாவில் தோன்ற வில்லையே அவைகள் எப்படி இந்திய மதங்களாகும். என்று சற்று அறிவு பூர்வமாக கேள்விகள் எழுப்பினால் அவைகள் அந்நிய நாட்டில் தோன்றிய மதங்களாக இருந்தாலும் கூட ஆயிரம் வருடத்திற்கு மேல் அம்மத மக்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள் எனவே அவைகளும் இந்திய சார்புடையவைகளே என்று சொல்வார்கள்.

ஆன்மிகமலர்

ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும், ஆஸ்ரேலியாவிலும் கூட ஹிந்து மதத்தை பின்பற்றுபவர்கள் இருக்கிறார்களே அதற்காக இந்து மதம் அந் நாடுகளை சேர்ந்த மதமென்று சொல்லிவிட முடியுமா? என்று திருப்பி கேட்டால் நீ என்ன தீவிரவாதியா? என்று நமக்கு முத்திரை குத்த பார்ப்பார்கள்.

ஒரு மதத்தை பின்பற்றும் மனிதர்கள் எந்த நாட்டில் வேண்டுமானாலும் வாழலாம் அப்படி வாழ்கிறார்கள் என்பதற்காக அந்த மதங்கள் தான் தோன்றிய இடத்து பூர்வ கோத்திரங்களை எந்த சமயத்திலும் விட்டு விடாது. கிருஸ்தவ மதம் என்பது சில நூறு ஆண்டுகளாக இந்திய



மக்களால் பின்பற்ற பட்டாலும் அதில் இந்திய தன்மை என்பது ஓரளவு கலந்து விட்டாலும் அதன் அஸ்திவாரத்தில் உள்ள ஐரோப்பிய வாசத்தை யாரும் மாற்றி விட முடியாது.

அது அதற்கென்று தனித்தனியான முகங்கள் உண்டு எனவே இஸ்லாமியர்களும் கிருஸ்தவர்களும் இந்தியாவில் இந்தியர்களாக வாழ்ந்தாலும் கூட அவர்கள் மதம் வெளியில் இருந்து வந்தது தான்.

இந்திய பண்பாட்டிற்கும் அவைகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது தான். இது மறுக்க முடியாத மறைக்க வேண்டாத உண்மையாகும். ஆனாலும் இதை சிலபேர் ஏனோ ஏற்றுகொள்ள மறுக்கிறார்கள்.

இதை விடுத்து இந்திய மதங்களை பற்றிய தகவல்களை மீண்டும் வலிந்து நாம் பெற முயற்சி செய்தோம் என்றால் அறிவில் சிறந்த சான்றோர்கள் பௌத்தமும், ஜைனமும் இந்தியாவில் தோன்றிய சிறப்பான மதங்கள் என்று தகவல்களை தருவார்கள் ஆனால் இவர்களில் யாரும் நாமும் கூட ஹிந்து, பௌத்தம், ஜைனம் தவிர வேற மதங்கள் எதுவும் இந்தியாவில் இல்லையா? என்று கேட்கவும் மாட்டோம் கேட்டாலும் பதிலை தேடி சொல்லவும் மாட்டோம்.

காரணம் நமது கவன குறைவு மட்டுமல்ல

e-magazine
aanmeegamalar.com



விஷயங்களை பற்றிய அறியாமையும் கூட அப்படி உள்ளது. இந்தியாவில் பஞ்சாப் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே வாழு கின்ற மக்கள் இந்து மதத்தில் இருந்து மாறுபட்ட மத பிரிவை பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள் அவர்களை சீக்கியர் என்று அழைப்போம் அவர்கள் மதத்திற்கு சீக்கிய மதம் என்று பெயர் அந்த மதமும் இந்தியாவில் தோன்றிய மிக முக்கிய மான மதம் என்று நம்மில் பலருக்கும் தெரியும்.

ஆனாலும் அது பலருடைய கவனத்திற்கு வராது காரணம் நம்மை சூழ்ந்துள்ள நமக்கு அருகாமையில் உள்ள விஷயங்களில் அக்கறை கொள்ளாத வண்ணம் பல காலமாக பயிற்றுவிக்க பட்டு விட்டோம்.

சீக்கியர் என்று சொன்னவுடன் நமக்கு நினைவுக்கு வருவது பஞ்சாப் தீவிரவாதிகள் தான் பிந்திரன் வாலே என்ற தீவிரவாத தலைவனின் வழிகாட்டுதலில் இயங்கிய காலிஸ்தான் என்ற தனிநாடு கோரிக்கை நமக்கு நினைவிற்கு வரும். அப்படி நமது நினைவில் வருவதற்கு கூட முக்கிய காரணம் அம்மக்களை பற்றிய அறிவால் அல்ல சீக்கிய சமூகத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களால் நமது முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதே காரணமாகும்.

இதை விடுத்து சீக்கியர்களை பற்றி நாம் நினைக்கும் போது நமது நினைவில் முன்னால் வந்து நிற்பவர்கள் முன்னாள் குடியரசு தலைவர் கியானி ஜையில்சிங் அவர்களும் முன்னாள் பாரத பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுமே ஆகும். இவர்கள் இரண்டு பேர் மட்டும் நமது கவனத்தை கவர்வதற்கு முக்கியமான காரணம் இரண்டு பேருமே நேரு குடும்பத்து விசுவாசிகள் அந்த குடும்பத்தின் அடிமைகள் போல் இருப்பவர்கள் என்பதனால் தான்.

முரட்டு தனமான நெடிய உருவம் சவரம் செய்யபடாத நீண்ட தாடி தலையில் அழகான தலப்பாகை இடுப்பில் சிறிய கத்தி இந்த தோற்றத்தோடு யாரை பார்த்தாலும் சீக்கியர்கள் என்று சொல்லிவிடுவோம். திரைபடங்களில் இவர்களை காட்டியவுடன் பல்லே பல்லே என்ற சந்தத்தில் வருகின்ற இசையை கேட்டவுடன் உருவங்களை பார்க்கவில்லை என்றாலும் இன்னாரை தான் குறிப்பிடுகிறார்கள் என்று நமக்கு தெரிந்து விடும்.

இந்தியாவின் தெற்கு பகுதியில் வாழுகின்ற நமக்கு சீக்கியர்களை பற்றிய இவ்வளவு விஷயங்கள் தான் தெரியுமே தவிர அவர்களை பற்றி மேலதிக விபரங்கள் எதுவும் நமக்கு தெரியாது. நம்மை பற்றியே நாம் முழுமையாக அறிந்து வைத்திராத போது அண்டைய வீட்டுக்காரனை பற்றி இதற்கு மேல் தெரிவதற்கு ஒன்றும் இல்லை என்று நீங்கள் சொன்னாலும் அதை ஒத்து கொள்வது தவிர வேறு வழியில்லை.

சீக்கியர்களும் சீக்கிய மதமும் இந்து மதத்

e-magazine
aanmeegamalar.com



தோடு மிக நெருக்கமான உறவு கொண்ட வர்கள் இந்து மதத்தின் அற்புதமான பரிணாம வளர்ச்சி சீக்கிய மதமென்று துணிந்து சொல்லலாம். குருநானக் என்ற மகான் பஞ்சாப் பகுதியில் பிறக்கவில்லை என்றால் இந்தியாவின் வடக்கு பகுதி முழுவதுமே இஸ்லாமிய மயமாக மாறி இருக்கும் என்பதை யாரும் மறுக்க இயலாது.




சீக்கிய மதம் போதனைகளால் உருவானது அல்ல போராட்டங்களால் உருவானதாகும். அம்மதத்தை சார்ந்த மாபெரும் குருமார்களில் பலர் ஔரங்கசீப் மற்றும் முகலாய அரசர்களால் படுகொலை செய்யப்பட்டவர்கள் என்பதை அறியும் போது சீக்கிய மதம் எவ்வளவு ரத்தத்தில் வளர்ந்தது என்பது நன்றாக தெரியவரும்.

சீக்கிய மதத்தில் இந்து மதத்தினுடைய தாக்கம் அதிகம் என்றாலும் சீக்கியர்கள் எவரும் ஹிந்து மதத்தை மாற்று மதமாக கருதுவது இல்லை என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

சீக்கிய மதத்தின் முதல்வர் அல்லது அம்மதத்தை உருவாக்கியவர் குருநானக் என்ற மாபெரும் யோகி ஆவார். குருநானக் முதல் குரு கோவிந்தர் வரையில் பத்து குருமார்கள் சீக்கிய மதத்தினுடைய முக்கிய தலைவர்கள் என்று துணிந்து சொல்லலாம்.

இந்தியாவில் தோன்றிய அற்புதமான தலை சிறந்த இரண்டு ஞானிகள் உண்டு அவர்களில் ஒருவர் கௌதமபுத்தர் மற்றொருவர் குருநானக் என்று புகழ்பெற்ற உருதுகவிஞனர் இக்பால் தெரிவிப்பது வெறும் புகழ்ச்சி அல்ல சத்தியமான உண்மையாகும்.

குருநானக்கின் சரித்திரத்தை படிக்கும் எவரும் அவரின் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் விசாலமான அறிவையும் ஞானத்தையும் உணர்ந்து கொண்டு இக்பால் அவர்களின் கருத்துக்கள் சத்தியமானது என்று ஒத்து கொள்வார்கள்.

சீக்கியர் என்ற சொல்லுக்கு சீடர்கள் என்பது பொருளாகும். நமது மகாகவி பாரதி கூட சீக்கியர்களை பற்றி குறிப்பிடும் போது சீடர்தம் மார்க்கம் என்று அழகான வார்த்தையால் கூறுகிறார். பௌத்தம், ஜைனம், சீக்கியம் இவை களை தனிமனிதர்களால் உருவான மதமென்று சிலர் கருதுவார்கள்.

அதாவது சனாதன தர்மமான ஹிந்து மதம் தனி ஒரு மனிதனால் உருவாக்கபட்டது அல்ல பல குருமார்களின் அனுபவ ஆன்மீக தேடலே ஆகும் என்று சொல்பவர்கள் உண்டு இந்து மதத்தை போலவே அதிலிருந்து தோன்றிய சீக்கிய மதமும் பல குருமார்களால் உருவானது என்றால் அது மிகை இல்லை சீக்கியர்களின் புனித நூல் குரு கிரந்தம் ஆகும்.

சீக்கிய வழிபாட்டு கூடங்களை குருத்துவாரா என்று அழைப்பார்கள் குருத்துவாரா என்றால் குரு வாழும் இடம் என்பது பொருளாகும். சீக்கியர்கள் தங்களது புனித நூலை குருவாக வும் இறைவனாகவும் கருதி தங்களது குருத்துவாராக் களில் வைத்து வழிபடுகிறார்கள். இவர்களை பற்றிய இவர்களின் ஆன்மிக தத்துவங்களை பற்றிய அறிவை ஓரளவாவது பெற்றால் தான் இந்து மதத்தின் ஆழம் இன்னெதென்று நமக்கு சிறிது தெரியும் எனவே சீக்கியத்தை பற்றிய சிந்தனையை சிறிது பெறுவோம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

e-magazine
aanmeegamalar.com

# பிரிந்திருக்கும் தம்பதியரை சேர்த்துவைக்கும் திருத்தலம்



மன வேறுபாட்டால் பிரிந்து வாழும் தம்பதியர் ஒன்று சேர வழிபட வேண்டிய திருத் தலம், காசிக்கு இணையாக கருதப்படும், கும்பகோணத்தை அடுத்துள்ள "ஸ்ரீவாஞ் சியம்".

காசி தேசத்தில் புண்ணியமும் வளரும். பாவமும் வளரும். ஆனால் இங்கு புண்ணியம் மட்டுமே வளரும். ராகுவும், கேதுவும் ஒரே திருமேனியில் காட்சி தரும் இத் தலம் பிள்ளைப் பேறு அருளும் தலம்.

ஏழரை, அஷ்டம மற்றும் கண்டகச் சனி திசைப் பரிகாரத் தலமாகும். இங்கு ஆயுஷ் ஹோமம், சஷ்டியப்த பூர்த்திகள் செய்ய நீண்ட ஆயுள் கிட்டும்.

இங்குள்ள குப்த கங்கையில் நீராடி பித்ரு காரியங்களைச் செய்தால் பித்ரு தோஷ நிவர்த்தி கிடைக்கும். ராகு கேதுவை வழிபட கால, சர்ப்ப தோஷம் நீங்கும்.

இத் தலத்தில் ஓர் இரவு தங்கினாலேயே செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து முக்தி கிடைக்கும். ஸ்ரீயாகிய திருவை (மஹாலஷ்மி) பரந்தாமன் தனது வாஞ்சையில் விரும்பி சேர்த்ததால் இத் தலம் ஸ்ரீவாஞ்சியம் எனப் பெயர் பெற்றது.

இங்குள்ள குப்த கங்கையில் நீராடி இறைவனையும், அம்பாளையும், மஹா லக்ஷ்மியையும் வழிபட்டால் பிரிந்துள்ள தம்பதி யர் பிணக்குகள் அனைத்தும் தீர்ந்து ஒன்று சேர்வர்.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

# ஆன்மிகமலர்
மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# பெரியவா ஆசி ஒன்றே போதும்

## வி.ஜி.பன்னீர்தாஸுக்கு ஏற்பட்ட புதுமையான அனுபவம்

e-magazine
aanmeegamalar.com

பெரியவாவிடம் வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களுக்கு ஏற்பட்ட நெகிழ்ச்சியான அனுபவத்தைப் பற்றி எஸ்.பாண்டுரங்கன் காஞ்சிபுரம் (நிர்வாக அறங்காவலர்) அவர்கள் கூறிய செய்தி மிகவும் வியப்பாக இருந்தது.


வியப்பிற்கு காரணமான செய்தியைப் பார்ப் போம்...


ஆன்மிகமலர்

நான் 1972ஆம் ஆண்டு காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானத்தின் நிர்வாக அறங்காவலராக இருந்தேன். அந்த ஆண்டு திரு.வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்கள், வேலூரில் அவர் நடத்தும் தவணை முறைக் கிளையைத் திறப்பதற்காகச் சென்று இருந்தார்.

காஞ்சிபுரம் மஹா பெரிய வாளை தரிசித்து, அவருடைய ஆசி பெறவேண்டும், என்று என்னுடைய வேலூர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை அழைத்துக் கொண்டு, காஞ்சி புரத்தில் உள்ள என் இல்லத்துக்கு வந்தார்கள்.

வந்தவுடன் ஸ்ரீ மஹா பெரியவாளை தரிசிக்க





வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது காஞ்சி சங்கர மடத்துக்கு ஸ்ரீகார்யமாக இருந்த திரு.ஜானகிராமையா அவர்களை தொடர்பு கொண்டு விவரம் சொன்னேன். "பெரியவா அவர்கள் தேனம்பாக்கத்தில் உள்ளார். நீ அவர்களை அழைத்துக்கொண்டு போய் வா" என்று சொன்னார்.

அன்றைய தினம் ஸ்ரீ மஹா பெரியவா மௌனம். பாரத நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மாண்புமிகு ஸ்ரீ வி.வி.கிரி. அவர்கள், அன்றைய தினம் காலை சுமார் பத்து மணி அளவில் ஸ்ரீ மஹா பெரியவாளைத் தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுச் சென்றுவிட்டார்.

ஆன்மிகமலர்.காம்


நாங்கள் அன்று மாலை ஐந்து மணி அளவில் தேனம்பாக்கம் சென்று ஸ்ரீ மஹாபெரியவாளைத் தரிசித்தோம். தேனம்பாக்கத்திற்கு திரு.வி.ஜி.பி, அவர் மனைவி, ஒரு புகைப்படக்காரர், கிருஷ்ண மூர்த்தி, நான் ஆகிய ஐவர் சென்றோம்.

திரு பன்னீர்தாஸ் அவர்கள், போட்டோ படம் எடுப்பவரிடம், ''பெரியவா அவர்கள் என்னை ஆசிர்வாதம் செய்யும் சமயம் நன்றாகப் பல கோணங்களில் படம் எடுக்க வேண்டும்'' என்று சொன்னார் நான் குறிக்கிட்டு, "எதற்கும் அவர்களிடம் உத்திரவு பெற்றால் நலமாக இருக்கும்" என்று சொன்னேன். அதற்கு திரு வி.ஜி.பி. அவர்கள், "பெரியவர்கள் போட்டோவுக்கு போஸ் கொடுக்கமாட்டார்கள். நாம்தான் வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

நாங்கள் வந்த விவரம் பெரியவாளிடம் சொல்லப்பட்டது. வரச்சொல் என்று அனுமதி கொடுத்துவிட்டு, மஹாபெரியவா எங்களுடன் பேச ஆரம்பித்துவிட்டார் அவர் குடிலுக்கு உள்ளே இருந்தார். நாங்கள் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டோம்.

ஸ்ரீ மஹாபெரியவா, திரு வி.ஜி.பி யைப் பார்த்து "எதற்கு வந்தீர்கள்!" என்று கேட்டார்கள்.

"நான் பத்தாயிரம் வீடுகள் கட்டி, தவணை முறையில் கொடுக்க ஒரு ஸ்கீம் போட்டுள்ளேன், அதற்கு ஸ்ரீ மஹாபெரியவாளுடைய ஆசீர்வாதம் வேண்டும். நான் ரோம் நாட்டிற்குச் சென்று, போப் ஆண்டவரை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றேன். இன்னும் பல மகான்களை தரிசித்து ஆசி பெற்றேன். அது போன்று தங்களுடைய



ஆசிர்வாதமும் எனக்குக் கிடைக்க வேண்டும் என்று இங்கு வந்துள்ளேன்..”

ஸ்ரீ மஹா பெரியவா; இதற்கு எவ்வளவு பணம் தேவை?

வி.ஜி.பி.; 42 கோடி ஆகும் என்று உத்தேச மதிப்பு.

ஸ்ரீ மஹா பெரியவா; இந்தப் பணம் உனக்கு எப்படிக் கிடைத்தது.

வி.ஜி.பி. ‘நான் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு டீ கடையில் வேலை செய்து வந்தேன். சில ஆண்டுகள் கழித்து தவணை முறைத் திட்டம் ஒன்று ஆரம்பித்தேன். அது வளர்ந்து, இப்பொழுது பல கிளைகள் உருவாகி உள்ளன. எல்லாம் மக்கள் பணம்தான். இதைப் போன்றுதான் வீடுகள் திட்டமும் செயல்படுத்தலாமென உத்தேசித்துள்ளேன். தவணை முறைத் திட்டம் ஆனபடியால் பணம் ரோலிங் ஆவதற்கு எங்களுக்கு சௌகரியமாக உள்ளது. இதற்கு அதிக முதலீடு தேவை இல்லை. நம்பிக்கை, நாணயம், மரியாதை இதுதான் எங்கள் முதலீடு

ஸ்ரீ மஹா பெரியவா; நல்ல திட்டம்தான். வீடு இல்லாத ஏழை குடும்பத்திற்கு உதவியாகவும், நேர்மையாகவும், பயன் உள்ளதாகவும் ஏழைக ளுக்கு சேவை செய்யுங்கள்.

இதற்குள் எங்களுடன் வந்த கேமராமேன் 20 படங்களை எடுத்து இருப்பார். ஸ்ரீ மகாபெரியவரிடம் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டு ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தான ஆயிரம் கால் மண்டபம் அருகில் சென்றோம். ஆயிரங்கால் மண்டபம் பழுதடைந்த நிலையில் கல்தூண்கள் எதிரே விழுந்து இருந்தன. அந்த கல்தூண்களை திரு வி.ஜி.பி. பார்த்து, “என்ன சார்? விலை மதிப்பே இல்லாத அளவு கல்தூண்கள் இப்படி சிதறிக் கிடக்கிறது? அவ்வளவும் Black Gold சார்!” என்று சொன்னார். அந்த சமயம் அவர் சென்னை கடற்கரை ஓரம் Golden Beach கட்டிக் கொண்டு இருந்தார்.

பிறகு அவர்,”என் வாழ்நாளில் இன்று மிகவும் சந்தோஷமான நாள். மறக்கமுடியாத இனிய நாள்! மஹா பெரியவாள் அவர்கள் எவ்வளவு எளிமையாக உள்ளார்!” என்று மனமாரப் புகழ்ந்து என்னிடம் சொன்னார். “நான் போய் நாலு நாட்களில் இன்று எடுத்த போட்டோ பிரதிகளை அனுப்பி வைக்கிறேன் என்று கூறி விடைபெற்றுச் சென்றார்

அவர் சென்னை போன ஐந்தாம் நாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் , “கண்கண்ட தெய்வம் என்றால் காஞ்சி சங்கராசாரியார்தான் விலை உயர்ந்த கேமராவினால் அன்றைய தினம் எடுக்கப்பட்ட போட்டோ படம் ஒன்று கூட பதிவாகவில்லை! எல்லா பிரதிகளும் கறுப்பாக உள்ளது நீங்கள் அன்று உத்திரவு பெற வேண்டுமென்று சொன்ன வார்த்தையை நான் உதாசீனம் செய்தேன், ஆனால், அவருடைய ஆசி ஒன்றே எனக்குப் போதும்’’ என்று கடிதத்தில் எழுதி இருந்தது...

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகமலர் Calendar

# மாசிமாத சிறப்புகள்

தமிழ் மாதங்களில் புண்ணிய நிறைந்த மாசி மாதத்தை மாங்கல்ய மாதம் என்றும் சொல்லுவது உண்டு. மாசி மாதத்தில் தாலி சரடினை மாற்றிக் கொண்டால் கணவரின் ஆயுள் நீடிக்கும் என்பது ஐதீகம்.

மாசி மாதம் முழுவதுமே சிவ வழிபாட்டிற்கும், தான தர்மங்கள் செய்வதற்கும் ஏற்ற காலமாகும். மற்ற மாதங்களில் வரும் ஏகாதசியில் விரதம் இருப்பதை விட மாசி மாதத்தில் வரும் ஏகாதசியில் விரதம் இருப்பது மிகவும் புண்ணியமானதாகும்.

கல்வியில் உயர்ந்த நிலையை அடைய விரும்புபவர்கள் மாசி மகத்தன்று கல்வி தொடர்பான பணிகளை துவங்கினால் தொட்டது அனைத்தும் வெற்றியை தரும்.

இந்த ஆண்டு மாசி மாதம் பிப்ரவரி 13ம் தேதி துவங்கி, மார்ச் 13ம் தேதி நிறைவடைகிறது. அளவில்லாத மகத்துவம் கொண்ட மாசி மாதத்தில் வேறு என்னென்ன விசேஷங்கள், எந்தெந்த நாளில் வருகிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

## 2024 மாசி மாத விசேஷங்கள்

மாசி 06 (பிப்ரவரி 16 வெள்ளி) – ரதஸப்தமி
மாசி 12 (பிப்ரவரி 24 சனி) – மாசி மகம்
மாசி 25 (மார்ச் 08 வெள்ளி) – மகா சிவராத்திரி

## 2024 மாசி மாத விரத நாட்கள்

சதுர்த்தி–மாசி 01........(பிப்ரவரி 13 செவ்வாய்),
சஷ்டி–மாசி 03..............(பிப்ரவரி 15 வியாழன்)
கிருத்திகை–மாசி 04.....(பிப்ரவரி 16 வெள்ளி)
ஏகாதசி–மாசி 08........(பிப்ரவரி 20 செவ்வாய்)
பிரதோஷம்–மாசி 09..........(பிப்ரவரி 21 புதன்),
பௌர்ணமி–மாசி 12............(பிப்ரவரி 24 சனி)
சங்.சதுர்த்தி–மாசி 16.........(பிப்ரவரி 28 புதன்)
சஷ்டி–மாசி 18....................(மார்ச் 01 வெள்ளி)
ஏகாதசி–மாசி 23..................(மார்ச் 06 புதன்)
திருவோணம்–மாசி 24.......(மார்ச் 07வியாழன்)
சிவராத்திரி–மாசி 25..........(மார்ச் 08 வெள்ளி)
பிரதோஷம்–மாசி 25..........(மார்ச் 08 வெள்ளி)
அமாவாசை–மாசி 27..........(மார்ச் 10 ஞாயிறு)
சதுர்த்தி–மாசி 30....................(மார்ச் 13 புதன்)

## 2024 மாசி மாத சுபமுகூர்த்த நாட்கள்:

மாசி 07 – பிப்ரவரி 19 (திங்கள்) – வளர்பிறை முகூர்த்தம்
மாசி 09 – பிப்ரவரி 21 (புதன்) வளர்பிறை முகூர்த்தம்
மாசி 10 – பிப்ரவரி 22 (வியாழன்) வளர்பிறை முகூர்த்தம்
மாசி 14 – பிப்ரவரி 26 (திங்கள்) தேய்பிறை முகூர்த்தம்
மாசி 18 – மார்ச் 01 (வெள்ளி) தேய்பிறை முகூர்த்தம்
மாசி 24 – மார்ச் 07 (வியாழன்) தேய்பிறை முகூர்த்தம்
மாசி 25 – மார்ச் 08 (வெள்ளி) தேய்பிறை முகூர்த்தம்

## 2024 மாசி மாத அஷ்டமி, நவமி, கரி நாட்கள்:

### அஷ்டமி

மாசி 04 பிப்ரவரி 16 (வெள்ளி), மாசி 20 மார்ச் 03 (ஞாயிறு)

### நவமி

மாசி 05 – பிப்ரவரி 17 (சனி), மாசி 21 – மார்ச் 04 (திங்கள்)

### கரி நாட்கள்

மாசி 15 பிப்ரவரி 27(செவ்வாய்), மாசி 16 – பிப்ரவரி 28(புதன்), மாசி 12 – பிப்ரவரி 29 (வியாழன்)

## 2024 மாசி மாத வாஸ்து நாள், நேரம்

மாசி 22 – மார்ச் 05 (செவ்வாய்) – காலை 10.32 முதல் 11.08 வரை.

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **176** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

e-magazine
aanmeegamalar.com







# நொய்டாவில் ‘அயோத்தி நகர்’




அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராம ஜென்ம பூமியில் ‘ஸ்ரீ ராம் லல்லா’ மற்றும் பிரம்ம கலசோத்சத்வம் நிறுவப்படுவது முன்னிட்டு, நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் ‘ஸ்ரீ ராம நாம ஜபம்‘, ஹோமம், மற்றும் ஸ்ரீ ராமர் பரிவாரத்திற்க்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், மற்றும் பல்வேறு பூஜைகள் செய்யப்பட்டது.

மேலும் பல்வேறு பூஜைகள் காலையில் ஜெய் ஸ்ரீ ராம் கோஷத்துடன் ‘ஸ்ரீ ராம நாம’ மற்றும் ‘ஹனுமான் சாலிசா’ பாராயணத்துடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து ‘ஸ்ரீ ராம நாம ஹோமம்‘ நடந்தது. நிகழ்வின் சிறப்பம்சமாக ஸ்ரீராமர் மற்றும் பரிவாரங்களுக்கு சிறப்பு அபிஷேகமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மற்றும் ‘அன்னதானம்‘ ஏற்பாடு செய்யப்பட்டது. மாலையில், ‘சுந்தர காண்ட பாராயணம், பண்டிட் ஸ்ரீ கிருஷ்ண பந்த் ‘அகிஞ்சனா’ வழங்கினார். மேலும், தீபத் திருவிழாவை, கோவில் நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. ஸ்ரீ ராமரை போற்றி பல்வேறு பக்திப் பாடல்களை பக்தர்கள் பாடிக்கொண்டிருந்தனர். மகா தீபாராதனையுடன் அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.


எஸ்.வெங்கடேசன்

தென்னிந்தியா முழுவதும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் உள்ள பிரபலமான கோவில்களில் செய்வது போல, பூஜைகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் அனைத்தும், கோவில் நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. பக்தர்களின் வசதிக்காக, அயோத்தியில் இருந்து நேரலையில் பார்க்கும் வகையில், பெரிய திரை வைக்கப்பட்டிருந்தது.

கடுமையான குளிர் இருந்த போதிலும், நொய்டா மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து ஏராளமான ‘ராம பக்தர்கள்’ நாள் முழுவதும் நடந்த விழாவில் பங்கேற்றனர். கோவில் கமிட்டி உறுப்பினர்கள்

e-magazine
aanmeegamalar.com









aanmeegamalar.com

மற்றும் ராம பக்தர்களும் 62 மற்றும் 22 செக்டார் களில் உள்ள இரு கோவில்களிலும் தூய்மை பணிகளில் ஈடுபட்டனர்.

நொய்டா கோயில் வளாகத்தில் உள்ள முழு பூஜை நிகழ்வுகளும் ஸ்ரீ ஸ்ரீராம் மேற்பார்வையில், கோயில் வாத்தியார்கள்: மணிகண்டன் சர்மா, விக்னேஷ், மற்றும் மோஹித் மிஸ்ரா ஆகியோரின் உதவியுடன் நடைபெற்றது.

## 'தைபூசம்'

'தை பூசம்', நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், செக் 62, நொய்டாவில், கலச பூஜையுடன் தொடங்கின. அதைத் தொடர்ந்து, 'முருக பக்தர்கள்' 'காவடி' மற்றும் 'பால்குடம்' எடுத்து, கோவிலுக்குள் ஊர்வலம் சென்றார்கள். விழாவின் சிறப்பம்சம், ஸ்ரீ கார்த்திகேயனுக்கு எண்ணெய், திரவிய பொடி, மஞ்சள் பொடி, பால், தயிர், தேன், பன்னீர், இளநீர், பழச்சாறு, விபூதி, சந்தனம், கலச அபிஷேகம், ஆகியவையால் நடத்தப்பட்டது. ஸ்ரீ கார்த்திகேயனை பல்வேறு மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது.

முருக பக்தர்கள், ஸ்ரீ கந்தர் அனுபூதி, மற்ற ஸ்லோகங்கள், ஸ்ரீ கார்த்திகேயன் போற்றும் பக்தி பாடல்கள், 'முருகனுக்கு ஹரோ ஹர' என்று முழக்கமிட்டனர். மேலும், அனைத்து பக்தர்களும் சேர்ந்து 'முருக கோஷம்' ஓதினார்கள்.

அனைத்து பூஜைகளும் கோவில் அர்ச்சகர்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா ஆகியோரால் செய்யப்பட்டது, அவை தென்னிந்தியா முழுவதும் மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் முருகன் கோவில்களில் நடப்பது போலவே நடத்தினார்கள். மகா தீபாராதனையுடன் நிறைவடைந்து, அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது.

முருக பக்தர்கள், கடுமையான குளிர் காலத்தையும் பொருட்படுத்தாமல், நொய்டா வின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், டெல்லி யின் அண்டைப் பகுதிகள், மற்றும் பிற இடங் களிலிருந்தும், ஏராளமானோர் வந்து ஸ்ரீ கார்த்தி கேயன் ஆசிகளைப் பெற்றார்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370




## கல்வி, செல்வம், வீரம் மூன்றையும் வாரி வழங்கும்

# கொப்புடையம்மன்

தமிழகத்தில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார மக்கள் அனைவரின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவள் அன்னை ஸ்ரீ கொப்புடையம்மன். இந்நகரின் மையப்பகுதியில் அம்பிகையின் அழகிய திருக்கோயில் அமைந்துள்ளது. இத்தலத்தின் கிராம தேவதையாக விளங்குகிறாள்.

ஆதிசங்கரர் இத்தலம் வந்து கொப்புடை அம்மனை வழிபட்டார். ஒரு காலத்தில் இந்த இடம் முழுவதும் காரை மரங்கள் அடர்ந்து செழித்த வனப்பகுதியாக இருந்த காரணத்தால் இவ்வூருக்கு “காரைக்குடி’ எனப் பெயர் பெற்றது.

இங்கு காட்டுப்பகுதியில், இக்கோயிலின் உபகோயிலான காட்டம்மன் கோயிலில் விளங்கும் காட்டம்மனின் தங்கையாக கொப்புடை நாயகி விளங்குகிறாள். இக்கோயில் வரலாற்றின்படி கொப்புடையம்மனுக்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால் காட்டம்மனுக்கு ஏழு பிள்ளைகள் உண்டு. கொப்புடையம்மன் தன் சகோதரியைக் காண வரும்பொழுது குழந்தைகளுக்குக்காக கொழுக்கட்டை முதலான தின்பண்டங்களை செய்து எடுத்து வருவாள்.

ஆனால், காட்டம்மனோ தன் சகோதரி குழந்தையில்லாமலிருப்பதால், தன் குழந்தைகளைப் பார்த்தால் கண்பட்டுவிடுமென்று கருதி, அவர்களை ஒளித்து வைத்து விடுகிறாள். தன்னைத்

aanmeegamalar.com e-magazine

தவறாக நினைத்த சகோதரியின் மீது கோபம் கொண்ட கொப்புடையம்மன், ஒளித்து வைத்த குழந்தைகளைக் கல்லாக்கி விடுகிறாள்.

அப்படியும் தன் கோபம் தணியாமல் அங்கிருந்து புறப்பட்டு காரைக்குடி வந்து, அங்கேயே தெய்வமாக அமர்ந்து விட்டதாக கூறப்படுகிறது.

அதன் பிறகு, கொப்புடை நாயகி தன் அக்காவை மன்னித்து அருளினார்.

அம்பிகை தன் திருக்கோயிலில் ஸ்ரீசக்கரத்தின் மீது கிழக்கு நோக்கி நின்ற நிலையில் ஜ்வாலை கிரீடத்துடன் பஞ்சலோக உற்சவத் திருமேனியில் வலது கை அபயம் அளிக்கும் தோற்றத்துடனும், வலது மேல் கை சூலத்தை ஏந்தியபடியும் இடது மேல் கை பாசமேந்தியபடியும் இடது கீழ்கை கபாலத்தை தாங்கியும் அருள்பாலிக்கிறாள்.

துர்க்கை அம்சத்துடன் விளங்கும் அம்பிகை, கல்வி, செல்வம், வீரம் என மூன்றையும் வாரி வழங்கும் வரப்பிரசாதியாய் விளங்குகிறாள். இந்த மூர்த்தமே உற்சவ மூர்த்தியாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

ஆன்மிகமலர் .காம்

இத் திருத்தலத்தில் கருப்பண்ணசாமி வேறெங்கும் இல்லாத கோலத்தில் குதிரையில் அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

இக்கோயிலில் பிரம்மோத்சவம் எனப்படும் பெருந்திருவிழா மிகவும் விசேஷமானது. இத்திரு விழா சித்திரை மாதம் கடைசி செவ் வாய்க்கிழமை தொடங்கி வைகாசி முதல் வாரம் முடிய பத்து நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது.

சித்திரை மாதம் வரும் நான்கு செவ்வாய்க் கிழமைகளில், மூன்றாவது செவ்வாயன்று கொப்புடையம்மனுக்குப் பூச்சொரிதல் விழா நடைபெறும். இத்திருவிழாவின் எட்டாம் நாள் காலையில் அம்பிகையின் தேரோட்டம் நடை பெறும். அந்த தேர், பிற்பகலில் புறப்பட்டு, மாலையில் காட்டம்மன் கோயிலை அடைந்து, இரவு அங்கேயே தங்கிவிட்டு மீண்டும் மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு ஆலய நிலைக்கு வந்து சேரும். இத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு கொள்வர்.

மிகவும் சக்தி வாய்ந்த கொப்புடையம்மனை தன் குலம் காப்பாள் என்ற நம்பிக்கையோடு வணங்குபவர்களின் தீராத நோய்களைத்தீர்த்து வைப்பதுடன், அவர்களை வளமாகவும் வாழ வைக்கிறாள். இங்குள்ள மக்கள் தங்கள் விவசாயம் செழிக்கவும், தொழில் விருத்திக்காகவும், கல்யாண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் அம்பிகையை பிரார்த்தித்து தங்கள் வேண்டுதல்களை நிறை வேற்றுகின்றனர்.

“ஓங்கார வடிவத்து உள்ளிருந்து
உலகீன்ற உமையவள் ஆதிசக்தி
பாங்காக மறை நான்கும் பரிமளித்துப்
பல்லுயிர்கள் வாழப் பராமரித்து
ஆங்காங்கே அற முயர நெறி வளர அருள்
சுரந்துரட்சிக்கும் கொப்புடையாளை
நீங்காது நெஞ்சகத்தே வணங்கிடுவோர்
நிகரில்லா செல்வத்தைப் பெறுவர்தமே!”

எனும் இந்தப் பதிகத்தைப் பாடி நாம் இருக்கும் இடதிலிருந்தே அம்மனை நினைத்து வழிபட்டால், நம் இன்னல்களைத் தீர்த்து வைப்பாள்.”

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம், சென்னை 600117
தொலைபேசி:
9940460969



e-magazine
aanmeegamalar.com





# தீராத வினைகள் தீர்க்கும்

# திருத்தினைநகர் சிவக்கொழுந்தீசர்

உலகில் எங்கும் காணாத அதிசய கோவில் ஒன்று உண்டெனில் அது திருத்தினை நகரில் உள்ள சிவக்கொழுந்தீசர் ஆலயமே எனலாம். ஆம். கடந்த மூன்று யுகங்களில்....நான்கு கோபுரங்கள், மூன்று பெரும் பிரகாரங்களைக் கொண்டு சுமார் ஐந்து குரோச (12¼ மைல்) சுற்றளவு கொண்ட மிக பிரம்மாண்டமான கோவிலாக இருந்துள்ளது.

இத்திருத்தலம் கிருதயுகம் மற்றும் த்ரேதாயுகத்தில் ஓம்காரபுரம் என்றும், துவாபரயுகத்தில் தேசப்பிரதம் என்றும், கலியுகத்தில் ஞானப்பிரதம் என்றும் அழைக்கப்பட்டு, தற்போது திருத்தினை நகர் என்று போற்றப்படுகின்றது. வழக்கில் இவ்வூர் தீர்த்தனகிரி என்று வழங்கப்படுகின்றது.

“சிவ ரகசியம்“ என்னும் நூலில் இத்தல மகிமைகள் விவரிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தின் மகிமையை கந்தன் அகத்தியருக்கு உபதேசிக்கின்றார். இத்தல ஈசனை வணங்கி, வழிபட்டு, திருமால் முராசுரனை வதம் செய்து, முராரி எனப் பெயர் பெற்றார். துர்வாசரால் சாபம் பெற்ற பிருங்கி மகரிஷி இங்கு சிவனை வழிபட்டு சாப நிவர்த்தி அடைகின்றார். கருடன் இப்பெருமானை பூஜித்து, பலம் பெற்று, தன் தாயின் அடிமை தளையை





தகர்க்கின்றார்.

இராமருக்கு இராவணனை வெல்ல உதவியாக இருந்து, அவரது பட்டாபிஷேகத்தைக் கண்ட ஜாம்பவான் இப்பதி லிங்கத்தை வெகுகாலம் பூஜித்து, பூரண ஆயுளும், ஞானமும் பெற்று வாழ்ந்தார். கந்தன், உமாதேவி, நந்திதேவர், அகத்தியர் ஆகியோர் வழிபட்ட பெருமான் இவர்.

பதஞ்சலி வியாக்ரபாதரின் கோரிக்கைக்கு இணங்கிய பெருமான், திருநடனக் காட்சியை இங்கு அளித்த பின்னரே தில்லையில் காட்டிய ருளினார். அகத்திய ருக்கும் திருமணக் காட்சியை இங்கே தந்த ருளினார் மகாதேவர்.

பெரியான் என்னும் ஏழை விவசாயி யின் பேரன்புக்குப் பணிந்த பெரு மான், அவன் படைத்த தினையமுதை குடித்து,



அவனுக்கு மோட்சம் அளித்தார்.

ஒரு சமயம் வங்க தேசத்து அரசன் வீரசேனன் இத்தலத்திற்கு வரும்போது தோல் நோய் பிடித்திருந்த நாய் ஒன்று இத்தல தீர்த்தத் தில் நீராடி நோய் நீங்கி நல்ல நிலையுடன்திரும்பியதைக் கண்டான். காவலாளிகளை கொண்டு குளத்தை தூரெடுத்தான். அப்போது கிடைக்கப்பெற்ற நடராஜரை இந்த தலத்திலே ஸ்தாபித்தான். வீரசேனனிடம் அசரீரியாக.... சிவபெருமான், தான் இங்கு சுயம்புவாக எழுந்தருளி பலகாலம் ஆகிவிட்டதாக கூறி, ஆலயமும் எழுப்பச் சொன்னார். அதன்படி ஆலயம் எழுப்பினான் மன்னன் வீரசேனன்.

நடுநாட்டின் தேவார திருத்தலங்களில் 22 ஆவது தலமாக புகழ்பெரப்புகின்றது இத்தலம். அதோடு, திருஞானசம்பந்தர், அப்பர், சேக்கிழார், இராமலிங்க வள்ளல், பட்டினத்தார் ஆகியோரும் பாடி பரவிய இப்பதியிலே, பங்குனி மாதம் 26, 27, 28 தேதிகளில் சூரிய ஒளிக்கதிர்கள் படரும் அதிசயம் நிகழும் ஆலயம்.

ஆலய இராஜகோபுரத்திற்கு வெளியே அன்னை கருந்தடங்கண்ணி நின்ற வண்ணம் அருள்பாலிக்கின்றாள் நீலாயதாக்ஷி, பிரணவபுரீஸ்வரி, ஒப்பிலாநாயகி போன்ற பெயர்களும் இவ்வன்னைக்கு உண்டு. விசாலமான இராஜகோபுரம். அதை கடந்து உள்ளே செல்ல.... கிழக்கு நோக்கிய சுவாமி சன்னிதி. அதனுள் 4 யுகங்களாக அருள்புரிந்து வருகின்றார் ஸ்ரீ சிவக்கொழுந்தீஸ்வரர். இவர் சிவாங்குரேஸ்வரர், நந்தீஸ்வரர், பிரணவபுரீஸ்வரர் போன்ற பெயர்களாலும் போற்றப்படுகின்றார்.

உற்சவர் நடராஜர் திருவடியின் கீழே பிரம்மா பஞ்சமுக வாத்தியமும், திருமால் பஞ்சசானிய சங்கும் முழங்குகின்றனர். இந்த அபூர்வ கோலத்தை இங்கு மட்டுமே காண முடியும். யோகாசனமிட்டு அமர்ந்திருக்கும் அதியபூர்வ தட்சிணாமூர்த்தியை இங்கு தரிசனம் செய்யலாம். தல வரலாற்று புடைப்புச் சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. துர்க்கை அஷ்டபுஜ துர்கையாக நின்றவண்ணம் பேரருள் புரிகின்றாள். ஜாம்பவானால் ஏற்படுத்தப்பட்ட ஜாம்பவான் தீர்த்தம் ஆலயத்திற்கு இடப்புறம் அமைந்துள்ளது. அதோடு அம்பிகை உண்டாக்கிய கௌளி தீர்த்தம், கருடன் ஏற்படுத்திய பெருமாள் ஏரி, தேவதீர்த்தம் என்னும் கடல் போன்றவையும் இத்தல தீர்த்தங்களாக விளங்குகின்றன.




தினமும் ஒரு பூ பூக்கும் காய் காய்க்கும் சரக்கொன்றை மரம் தல விருட்ஷமாக திகழ்கிறது. கல்வெட்டில் இவ்வூர் “விருதராச பயங்கர வளநாட்டு மேற்கானாட்டு ஜெயங்கொண்ட சதுர்வேதிமங்கலத்து திருத்தினை நகர்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசியாக 1949 மற்றும் 1998 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

தினமும் இரண்டு கால பூஜைகள் நடக்கும் இவ்வாலயத்தில்...வைகாசி விசாகத்தில் தேர்த்திருவிழாவும், அனுஷத்தில் ஜாம்பவான் தீர்த்தத்தில் தீர்த்தவாரியும், மாசி மகத்தில் தேவதீர்த்தமென்னும் கடலில் தீர்த்தவாரியும் சிறப்புடன் நடைபெறுகின்றது. தினையமுது படைத்து, வழிபடுபவர்களது தீராத வினைகளையும், நோய்களையும் தீர்த்தருள்கின்றார் சிவக்கொழுந்தீஸ்வரர் இவரை வணங்கி, வழிபட்டு, வாழ்வில் வளம் பெறுவோம்.

கடலூர் சிதம்பரம் பேருந்து சாலையில், ஆலப்பாக்கம் புதுச்சத்திரம் இடையே உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில்அமைந்துள்ளது தீர்த்தனகிரி. கடலூர் மற்றும் சிதம்பரத்திலிருந்து வர பேருந்து வசதி உள்ளது.





மோ.கணேஷ்

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு:
9789156179.

# கண்ணாடி டம்ளரில் தண்ணீர் எலுமிச்சைபழத்தால் கிடைக்கும் பலன்

நாம் பல கடைகளில், வீடுகளில், பணி யிடங்களில் ஒரு டம்பளர் நீரினுள் எலும்மிச்சை இட்டு வைத்திர்ப்பதை கண்டிருப்போம். இது எதனால் என்ற கேள்வி இயல்பாகவே நம் அனைவருக்கும் எழும்.

எலுமிச்சை என்பது வெறும் பழம் என்பது மட்டுமல்ல அதற்கென பிரத்யேக ஆன்மீகமற்றும் மருத்துவ குணங்கள் உண்டு. குறிப்பாக, எலும்மிச்சையில் பொட்டாசியம், கேல்சியம், பாஸ்பரஸ், மற்றும் மெக்னீஸியம் சத்துகள் அடங்கியுள்ளன.

எனவே தண்ணீரில் எலும்மிச்சை கலந்து எடுத்து கொள்வது முழுமையான ஆரோக் யத்திற்கும், எதிர்ப்பு சக்திற்கும் உகந்ததாக அமையும்.

ஆன்மீக ரீதியாக பார்த்தால் எலும்மிச்சைக்கு எதையும் நேர்மறையான ஆற்றலாக மாற்றும் தன்மை உண்டு. ஒருவர் தீய எண்ணத்துடன் நம்மை அணுகினாலும் கூட ஒரு டம்ளர் நீரில் எலுமிச்சை இருப்பதை பார்த்தால் உளவியல் ரீதியாக சற்று திகைப்படைவார்.

அந்த திகைப்பே அவருடைய தீவிரத்தை குறைத்து விடும்.

மற்றொன்று தண்ணீருக்கு நியாபக சக்தி உண்டு என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன . தண்ணீருக்கு தன்னை சுற்றியுள்ள ஆற்றலுக்கு தகுந்தஸீணீவாறு மாறும் தன்மை உண்டு. இதற்கு பல உதாரணங்கள் உண்டு கடவுளின் பெயர் சொல்லி ஹோமம் நிகழ்த்தும் போது கலச தீர்த்தமாகவும், அர்ச்சனையின் போது தீர்த்தமாகவும், ஏன் சில சமயம் சாதுக்கள் பிறரை வாழ்த்தவோ அல்லது சபிக்கவோ வேண்டும் என்றால் கூட தண்ணீரை பயன்படுத்துவதை நாம் பார்த்திருக்கிறோம்.

நேர்மறை மற்றும் எதிர்மறை ஆற்றல் இரண்டிற்குமே தகுந்தவாறு மாறும் தன்மை உடைய நீரை நமக்கு ஏதுவான நேர்மறை ஆற்றலின் பால் ஈர்க்க வேண்டுமெனில், அங்கு எலும்மிச்சையை பயன்படுத்துவதே சிறப்பானது. எலும்மிச்சையை நீரில் இடும் போது, அதன் இயல்பான தன்மையினால் அது அந்த இடத்தை சுற்றியுள்ள தீமைகளை போக்குகிறது.

வீடுகள், அலுவலகங்கள், பணியிடங்கள் போன்ற இடங்களில் ஒரு கண்ணாடி டம்பளரில் எலும்மிச்சையை இட்டு வைப்பது நல்லது. இவ்வாறு செய்கிற போது அதிலிருந்து பெருகும் ஆற்றல்ல் அந்த இடத்தை முற்றிலுமாக தீய அதிர்வுகளிடமிருந்து சுத்திகரிக்கிறது. மேலும் அந்த இடத்திற்கு தேவையான நல்லதிர்வுகளை ஈர்த்து பல நல்ல சௌபாக்கியங்களை பெற்று தருகிறது.



ஆன்மிகமலர்.காம்

e-magazine
aanmeegamalar.com

# வெறும் சொல்லினால் ஞானம் பேசுபவன் கடவுளை அறியாதவன்

சீடன்: கடவுளை புரிந்து கொள்ள என்ன வேண்டும்?

ஞானி: ஒன்றைச் சொல்லி இன்னொன்றைப் பற்றி விளக்குவது சாதாரண வாழ்க்கையில் ஏமாற்றுவது போல் இருக்கும். ஆனால் பக்தி மார்க்கத்தில் அது சகஜம். புரிந்து கொள்ள பணிவு வேண்டும்.

சீடன்: கடவுளைப் பார்க்க வேறு உதவிகள்?

ஞானி: கடவுளைப் பார்க்க இரண்டு தொழில்கள் உள்ளது. ஒன்று உடல், கண், காது என்ற வெளித்தொழிற்சாலை. இரண்டாவதாக மனது என்ற உட்தொழிற்பட்டறை.

சீடன்: இதை உபயோகித்தால் பக்தர்கள் ஆகிறார்களா?

ஞானி: கர்மேந்திரியத்தின் முழு உபயோகத்தை அறிந்தவர்கள் பக்தர்கள் ஆவார்கள்.

சீடன்: இந்த உதவிகளால் அனைவருக்கும் இலாபம் தானே?

ஞானி: ஆமாம். ஆனால் உதவியைப் பெற்றுக் கொண்ட மனிதன் பயத்தை விடுதல் வேண்டும். அப்பொழுது தான் அவன் உதவியை உபயோகித்துக் கொண்டான் என்று அர்த்தம்.

சீடன்: இது விக்கிரக தரிசனத்திலும் கிடைக்கும் அல்லவா?

ஞானி: உண்மை. விக்கிரக தரிசனத்தில் கிடைப்பது ஆத்ம தரிசனம்.

சீடன்: எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்ப்பதில் ஞானிகள் அடைவது என்ன?

ஞானி: வருகின்ற மக்களின் திருப்தியைப் பார்ப்பவன் மஹான். அதில், அந்தத் தொண்டில் திருப்தி அடைகிறான்.

சீடன்: மனிதனின் நிலை என்ன?

ஞானி: மனிதன் தன் அதிருப்தியை வெளிப்படுத்துகிறான். அது அவனிடமே, அடுத்தவரிடம் இருந்து திரும்பி வருகிறது. திருப்தியை மனிதன் சந்திக்கும் பொழுதே ஞானியாகிறான்.

சீடன்: அந்த சூழ்நிலை அமைதியாக இருக்குமல்லவா?

ஞானி: அது தான் இயற்கையான சூழ்நிலை மனித குலத்திற்கு. கடவுள் அருளால் கிடைப்பதால் அமைதி கிட்டும்.

சீடன்: மெய்யன்பர்களுக்கும், ஞானிகளுக்குமிடையே ஒரு இடைவெளி காணப்படுகிறதே?

ஞானி: ஆம் அந்த இடைவெளி தான் கடவுள். பக்தி செய்! நானும், நீயும் ஒரே இடத்தில் இருக்கலாம்.

சீடன்: உங்கள் சன்னதியிலேயே இது எளியவனுக்கு கிட்டுமா?

ஞானி: அது உன்னிடம் அல்லவா உள்ளது. பரிணாம வளர்ச்சியில் எங்கேநின்றால் பக்தனாவோம் என்பதை குருவின் சன்னதியில் உணருகிறாய். ஆண்டவனின் திருநாமம் இதற்கு உதவுகிறது. பக்தி செய், பலன் கிட்டும்.

சீடன்: என்னை நினைவில் வைத்துக் கொள்வீர்களா?



ஞானி: நினைவில் எப்பொழுதும் நம்மை வைத்துக் கொள்பவர்களிடம் நமக்கு அன்பு உண்டாகிறது. ஞானிகளும், கடவுளும் உண்மையான தொண்டனை, பக்தனை மறப்பதில்லை.


சீடன்: இறைவனிடம் அடிமையாக இருக்கலாமா?

ஞானி: அது பக்தனின் அடையாளம்.

சீடன்: துன்பம் எப்பொழுது அழியும்?

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

ஞானி: அதன் மூலம் தெரியும்போது.

சீடன்: குரு என்பவன் யார்?

ஞானி: துன்பத்தைப் போக்காமல் துன்பத்தைப் போக்கும் வழியைக் காட்டுபவன்.

சீடன்: பிரார்த்தனைகள் எப்பொழுது வருகிறது?

ஞானி: பருவம் தப்பிய காலங்களில் எண்ணும் எண்ணங் களில்.

சீடன்: எது ஆண்மையற்ற தன்மை?

ஞானி: வீரனுக்கு வரும் கலக்கம்.

சீடன்: எது அறிவு?

ஞானி: உயிர் வேறு உடல் வேறு என எண்ணுவது.

சீடன்: அறிவை எதற்கு உபயோகப்படுத்த வேண்டும்?

ஞானி: பலன் எதிர்பாராத கடமையைச் செய்ய.

சீடன்: அறிவு கடவுளைப் புறக்கணித்தால்?

ஞானி: உடலோடு ஒட்டிய ஆணவமும் கர்வமும் மிஞ்சும்.

சீடன்: அதனால் என்ன கெடுதல்?

ஞானி: தோல்விவரும்போது அறிவு உன்னிடமிருந்து அகலும்.

சீடன்: உண்மையை அறிய என்ன செய்யவேண்டும்?

ஞானி: இறைவனை பற்றி படிக்க வேண்டும்.

சீடன்: உலகைக் கண்டு பயப்படுபவன் யார்?

ஞானி: கோழை. விவேகி அல்ல.

சீடன்: உலகில் உயர்ந்தவன் யார்?

ஞானி: கடமையை நிகழ்த்திய மனிதன்.

சீடன்: யார் உண்மையான விவேகி?

ஞானி: வாழ்வு என்ற குறுகிய வியாபாரக் காலத்தை உணர்ந்தவன்.

சீடன்: இறைவனின் எண்ணத்தில் யார் உயர்ந்தவன்?

ஞானி: கர்மம் என்ற தொழில் செய்யும் பாதையில் நடப்பவன்

சீடன்: அப்படியானால் தொழிலே தெய்வமா?

ஞானி: தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டால்.

சீடன்: மனிதனின் இயற்கை உணர்வு எது?

ஞானி: அழியாத உயிரின் நினைவு

சீடன்: கடவுளையே தொழிலாக நினைத்தால்?

ஞானி: முயலாமல் தவம் செய்யாமல் அவனே வளருவான்.

சீடன்: யார் கடவுளை அறியாதவன்?

ஞானி: வெறும் சொல்லினால் ஞானம் பேசுபவன்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

பஜன்மண்டலியினர்,

ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,

ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,

கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,

அன்னதானம் செய்பவர்கள்,

பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

வாட்சப் எண்: 9444228203

# பகுத்தறிவும் ஆன்மீகமும்

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னால் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடந்த சுயமரியாதை மகாநாட்டுக்குப் போயிருந்தேன். நமது சமயத்தில் உள்ள மூடக் கருத்துகளை நையாண்டி செய்து பல அறிஞர்கள் சுவையாகப் பேசினார்கள்.

அவர்களது பேச்சுத் திறமையும் துணிச்சலும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

இந்த மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்னால் தினந்தோறும் கோயிலுக்குப்போய் இறைவனை வணங்கி வந்தேன்.

மாநாட்டுப் பேச்சுகளைக் கேட்ட பிறகு “சாமியாவது, சாத்தானாவது ! மந்திரமாவது, மண்ணாங்கட்டியாவது !” என்று சொல்லி கடவுள் நம்பிக்கை உள்ளவர்களைப் பார்த்துப் பழிக்கத் தொடங்கினேன். இப்படியாகப் பல ஆண்டுகள் திரிகரண சுத்தியாக “கடவுள் இல்லை, இல்லவே இல்லை’ என்ற உறுதியில் நின்றேன்.




இந்த உறுதிக்கு ஊட்டம் கொடுப்பதற்காக “வால்டேர்’ “இங்கர்சால்’ “பெட்ரன்ட்ரஸ்ஸல்’ போன்ற சிறந்த நாத்திகவாதிகளுடைய நூல்களை கவனத்தோடும் ஆர்வத்தோடும் படித்து வந்தேன்.

ஆனால் என்னுடைய உறுதிப்பாட்டுக்கு உலை வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள் பின்னால் நடக்கத் தொடங்கின. பாளையங்கோட்டையில் நான் வழக்குரைஞராக இருந்தபோது கல்கத்தா தீர்ப்பு ஒன்றை மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கோளாகக் காட்ட எண்ணி நூலகத்திலிருந்து “41 கல்கத்தா” என்ற தீர்ப்புத் தொகுதியை எடுக்கப் போனேன். புத்தகத்தைப் புரட்டியபோது அதிலிருந்த ஒரு கருந்தேள் என் விரலில் கொட்டிவிட்டது.

தேள்கடி அனுபவம் எனக்கு முன்னும் இருந்ததில்லை, பின்னும் இருந்ததில்லை. கொஞ்ச நேரம் விரலில் கடுகடுப்பு இருந்தது. சிரித்துச் சமாளிக்கப் பார்த்தேன். ஆனால் நேரம் ஆக ஆக விஷம் ஏறிக்கொண்டே போயிற்று. வலி பொறுக்க முடியாமல் நீதிபதியிடம் “வாய்தா” வாங்கிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன்.

அதற்குள் கை முழுவதும் வலி பரவி நெறி கட்டிக் கொண்டது. என் துன்பத்தைச் சகிக்க முடியாத என் அத்தை பக்கத்து வீட்டுப் பையன் மணியை அவசரமாக அழைத்தார். அவனுக்கு வயது 10 இருக்கும். என்னைக் கண்டாலே அவன் அஞ்சுவான்.

அவனைக் கண்டாலே எனக்கு ஏளனம். கையில் ஒரு வேப்பங்குலையை வைத்துக் கொண்டு ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டு பயமில்லாமல் அவன் என்னை அணுகி, வேப்பங்குலையால் என் கையில் மூன்று முறை அடித்தான்.

உடனே என் வலியெல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது ! நடந்த நிகழ்ச்சியை என்னால் நம்பவே முடியவில்லை !

மணியை அரைமணி நேரம் குறுக்கு விசாரணை செய்ததில், சந்திரகிரகண காலத்தில் நட்டாற்றில் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு லட்சக்கணக்காக ஒரு மந்திரத்தை ஜபித்ததால் தனக்கு இந்த விஷம் இறக்கும் சக்தி கை வந்தது என்று சொன்னான்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத மந்திரத்துக்கு இவ்வளவு சக்தி இருக்குமா என்று திகைத்தேன்.

பெட்ரன்ட் ரஸ்ஸலைப் படித்து உருவேற்றிய என் பகுத்தறிவுக்கு இந்த நிகழ்ச்சி அவமானத்தையே தந்தது. நாளடைவில் இன்னும் பலஅதிர்ச்சி தரத்தக்க நிகழ்ச்சிகள் எனக்கு நடக்கவே, வாழ்க்கையைப் பார்க்கும் என் பார்வை மாறியது. என் மனமும் மாறியது. என் வாழ்வின் அடிப்படையே மாறிவிட்டது

– நீதிபதி எஸ் மகராஜன் எழுதிய
“ஆடத் தெரியாத கடவுள்”
நூலிலிருந்து

e-magazine
aanmeegamalar.com

# சூலமங்கலம் சகோதரிகளின் விடாமுயற்சி, நம்பிக்கை வரலாற்று சாதனை படைத்த

# கந்தசஷ்டி கவசம்

e-magazine
aanmeegamalar.com

இசையில் ஆர்வம் கொண்ட ஒரு இளம் பெண்... தன் சகோதரியோடு இணைந்து ஒரு பாடலை பாடி வெளியிட நினைத்தார்.

அந்தக் காலத்தில் இசைத்தட்டு என்றுகூறப் பட்டது கிராமபோன்களையே, அந்தவகையில் பல கிராமபோன் ரிகார்டு கம்பெனிகளை கேட்டுப் பார்த்தாராம்...

ஆனால் இசைத்தட்டு கம்பெனிகள் அவர்கள் பாடிய பாடலை வெளியிட மறுத்து விட்டார்களாம்.

அந்த இசைத்தட்டு கம்பெனிகள் அந்த சகோதரிகள் பாடிய பாடலை வெளியிட மறுப்பு சொன்னதற்கான ஒரே காரணம்...

''ஓதுவார்கள் பலர் பாடியும் அது மக்களைச் சரியாக சென்றடையவில்லை, வீணாக இதை வெளியிட்டு மிகப்பெரிய நஷ்டம் அடைய விரும்பவில்லை, தேவையில்லாமல் இதை வெளியிட நினைத்து அலைந்து திரியாதீர்கள். இந்த வீண்வேலையை விட்டு விடுங்கள்..'' என்று அந்த இளம் பெண்ணிற்கு அறிவுரை கூறினார்கள்.

ஆனாலும் விடவில்லை அந்த சகோதரிகள்...

இசைத்தட்டு சுழல்வது போல், இசைத்தட்டு கம்பெனிகளை சுற்றி சுழன்று வந்து முயற் சித்தும்...

ஆன்மிகமலர்

கீறல் விழுந்த இசைத்தட்டுப்போலவே அனைவரிடமிருந்து ''முடியாது'' என்ற பதிலே திரும்ப திரும்ப வந்ததாம்...

ஆனாலும் மனம் தளராத அந்த சகோதரிகள் அந்தப் பாடலை பல ராகங்களில் டியூன் போட்டுப் பாடிப் பார்த்தார்களாம்...

முதலில் 'ஆபேரி' அடுத்து 'சுப பந்துவராளி', அதனைத் தொடர்ந்து 'கல்யாணி' இறுதியாக 'தோடி'... இப்படி நான்கு ராகத்தில் பாடினார்கள் இந்தப் பாடலை...!!!

ஒருவழியாக 1970–ல் வெறும் 500 ரிகார்டுகள் மட்டுமே வெளியிட்டார்களாம்..

ஆனால்... ஆச்சரியம் காத்துக்கொண் டிருந்ததாம்.

வெளியிட மறுத்த நிறுவனங்கள் வாயில் விரலை வைத்து ஆச்சரியத்துடன் பார்க்கு மளவிற்கு அந்த ரிக்கார்ட் பல ரிக்கார்டுகளை




முறியடித்து வரலாற்று சாதனை படைத்தது...

இப்படி அந்தக் காலத்தில் படாத பாடுபட்டு பாடி இந்த இசைத்தட்டை வெளியிட்ட சகோதரிகள்தான் சூலமங்கலம் சகோதரிகள்!!!

நாயாய் பேயாய் அலைந்து அவர்கள் வெளி யிட விரும்பி அந்தப் பாடல்...

கந்த சஷ்டி கவசம்...

''சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்..''

கந்தசஷ்டி கவசத்தை வேறு சிலரும் பாடி யிருந்தாலும், சூலமங்கலம் சகோதரிகள் அளவுக்கு வேறு எதுவும் நம்மைக் கவரவில்லை...!

FREE

# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

**முற்றிலும் இலவசம்**
**எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை**

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...




eBook FREE DOWNLOAD

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# கோபத்தில் துடித்த நரசிம்மர் இதயம் வலப்புறம் அமர்ந்த மகாலட்சுமி

## தஞ்சையை சுற்றியுள்ள முக்கிய பெருமாள் கோவில்கள்

தஞ்சாவூரில் நீலமேகப்பெருமாள், மணிக்குன்ற பெருமாள், வீரநரசிம்மர் பெருமாள் கோயில்கள் சேர்ந்து ஒரு திவ்யதேசமாக இருக்கிறது. இந்தக் கோயில்கள் அருகருகே உள்ளன.

பராசர மகரிஷி மணிமுக்தா நதிக்கரையில் ஆஸ்ரமம் அமைத்து தவம் செய்து வந்தார். அந்த நதியில் தான் கொண்டு வந்த அமிர்தத்தைக் கலந்தார். அப்போது சிவனிடம் சாகா வரம் பெற்ற தஞ்சகன், தண்டகன், தாராசுரன் என்ற அசுரர்கள் அவரைத் தொந்தரவு செய்தனர்.

பராசரர் அவர்களை எச்சரித்தார். அவர்களோ கேட்பதாக இல்லை. எனவே அவர்களை தண்டிக்கும்படி சிவனிடம் வேண்டினார். சிவன் காளிதேவியை அனுப்பி அசுரர்களை வதம் செய்தார். ஆனால், அசுரர்கள் மூவரும் அமிர்தம் கலந்த நதி நீரைப் பருகி, மீண்டும் மீண்டும் உயிர் பெற்று முனிவர்களை கொடுமைப்படுத்தினர்.

பராசரர் மகாவிஷ்ணுவிடம் வேண்டினார்.

மகாவிஷ்ணு அசுரர்களை அழிக்கச் சென்றார். அப்போது தஞ்சகன் யானை வடிவம் எடுக்கவே, விஷ்ணு அவனை அழிக்க நரசிம்ம அவதாரம் எடுத்து, தன்



மடியில் கிடத்தி வயிற்றைக் கிழித்தார். அவரது ஸ்பரிசம் பட்டதும் தஞ்சகனுக்கு ஞானம் பிறந்தது.

அசுர குணங்கள் ஒழியப்பெற்ற அவன் மகாவிஷ்ணுவிடம், “எனக்காக நரசிம்மராக வந்த நீங்கள் இங்கேயே தங்கி மக்களுக்கும் அருள வேண்டும், எனது பெயராலேயே இத்தலமும் அழைக்கப்பட வேண்டும்” எனக் கேட்டான். அவரும் அருள்புரிந்தார். அவனது பெயரால் இத்தலம் ‘தஞ்சமாபுரி’ எனப்பட்டது. (பிற்காலத்தில் தஞ்சாவூர் ஆனது).

தஞ்சகனின் அழிவைக்கண்ட தண்டகன், பூமியை பிளந்து கொண்டு உள்ளே சென்றான். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து பூமிக்குள் சென்று அவனை அழித்தார். பின் காளியை அனுப்பி தாரகனை வதம் செய்தார். மூன்று அசுரர்களும் அழிக்கப்பட்ட பிறகு அவர் பராசரருக்கு நீலமேகப்பெருமாளாக காட்சி தந்தார். வீர நரசிம்மர், மணிக்குன்றப் பெருமாள் என்ற பெயர்களிலும் இங்கு அருள்பாலிக்கிறார். மூன்றுகோயில்களும் ஒரே வளாகத்தில் உள்ளன. ஒரே திவ்யதேசமாகப் போற்றப்படுகின்றன.

சக்கரத்தாழ்வாரான பெருமாள்:

வீரநரசிம்மர் கோயிலில் மகாவிஷ்ணுவே சக்கரத்தாழ்வாராக இருக்கிறார். வலப்புறத்தில் இருக்கும் யானையை தடவிக்கொடுத்தபடி இருக்க, இடப்புறத்தில் தஞ்சகாசுரன் சுவாமியை





e-magazine
aanmeegamalar.com

வணங்குவது போல சிலை அமைப்பு இருக்கிறது.

இவருக்கு பின்புறத்தில் நரசிம்மர் யோக பட்டையுடன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். அவருக்கு இருபுறமும் இரண்யன், பிரகலாதன் இருக்கின்றனர்.

வலவந்தை நரசிம்மர்:

நரசிம்மரின் இடதுபுறத்தில் அமர்ந்திருக்கும் மகாலட்சுமி, நீலமேகப்பெருமாள் கோயில் பிரகாரத்தில் அவருக்கு வலப்புறத்தில் இருக்கிறார்கள். இவரை 'வலவந்தை நரசிம்மர்' என்கின் றனர்.

அசுரனை அழித்த நரசிம்மர், இதயம் கோபத்தில் துடித்துக்கொண்டிருக்க இத்தலத்தில் அமர்ந்தார். கோபம் இருக்கும் இடத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதில்லை. எனவே அவள் நரசிம்மருக்கு வலப்புறத்தில் அமர்ந்துகொண்டாள். கோபம் கொண்டவர்களுக்கு லட்சுமி கடாட்சம் கிடைக்காது என்பதை இந்த வடிவம் நமக்கு உணர்த்துகிறது. அதிகமாக கோபப்படுபவர்கள் இவரை வணங்கி மன அமைதி பெறலாம்.

சிங்கப்பெருமாள் கோயிலில் வீர நரசிம்மர், முன் மண்டபத்தில் யோக நரசிம்மர், நீலமேகப் பெருமாள் கோயில் பிரகாரத்தில் லட்சுமி நரசிம்மர், கருடாழ்வார் விமானத்தில் அபயவரத நரசிம்மர், தாயார் சந்நதியில் உள்ள தூணில் கம்பத்தடி யோக நரசிம்மர் என இத்தலத்தில் பஞ்ச நரசிம்மர்கள் காட்சி தருகின்றனர்.

மூன்று மூலவர்களுக்கும் தைலக்காப்பு மட்டுமே செய்யப்படுகிறது. இத்தலத்து தாயார் செங்கமலவல்லி, தஞ்சைநாயகி, அம்புஜவல்லி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிங்ள்.

ஹயக்ரீவர்:


ஹயக்ரீவர் லட்சுமியுடன் இருக்கிறார். கல்விக்கு அதிபதியான ஹயக்ரீவர், செல்வத்திற்கு அதிபதியான லட்சுமிக்கு ஏலக்காய் மாலை சாத்தி, நெய்விளக்கு, கற்கண்டு படைத்து வணங்கிச்ல் கல்வி, செல்வம் செழிக்கும்.

திருவிழா: பங்குனி, சித்திரை, வைகாசியில் மூன்று பெருமாள்களுக்கும் பிரம்மோற்ஸவம் நடக்கிறது. வைகாசியில் 18 கருடசேவை திருவிழா விசேஷம்.

இருப்பிடம்: தஞ்சாவூர் பழைய பஸ் ஸ்டாண்டில் இருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 3 கி.மீ.,

நடை திறப்பு: வீரநரசிம்ம பெருமாள் கோயில் காலை 7–12 மணி, மாலை 5–8.30 மணி. மற்ற இரண்டு கோயில்களுக்கு செல்ல இங்கிருந்து அர்ச்சகரை அழைத்துச் செல்லவேண்டும்.

போன்: 04362 223 384



ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்
e-magazine
aanmeegamalar.com



# கடன் தொல்லை தீர்த்துவைக்கும் "ரிண விமோஷன லிங்கேஸ்வரர்"

## மாசிமாதத்தில் சூரியன் வணங்கும் அற்புதம்

கும்பகோணத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் திருவாரூர் வழியில்அமைந்துள்ளது "திருச்சேறை உடையார் கோவில்''. இங்கு தனி சந்நதியில் "ருணவிமோச்சனராய்" அருள்பாளிக் கிறார்பரமேஸ்வரன்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

தொடர்ந்து 11திங்கட்கிழமைகள் அர்ச்சனை செய்து, 11 வது வாரம் அபிஷேக ஆராதனை செய்யஅனைத்து வித கடன் தொல்லைகளும் தீர்கிறது. இச் சந்நதியின் முன் நின்று "கூறை உவந்தளித்த கோவே யென்று அன்பர் தொழச் சேறை உவந்திருந்த சிற்பரமே " எனமனமுருக 11 முறை பாராயணம் செய்தால் மிகச் சிறந்த பலன் கிடைக்கும்.

ஒருவர் முற்பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் அடுத்தடுத்த பிறவிகளில் தொடர்கிறது. முன்வினைப் பயன்கள் அனைத்தும் பிறவிக் கடன்களாகின்றன.

முற் பிறவி தீவினைகள் நீங்கவும், இப் பிறவியின் கடன்கள் தீரவும், வறுமை நீங்கி சுபிட்சமான வாழ்க்கை கிடைத்திடவும் வணங்க வேண்டிய இறைவன், திருச்சேறையில் செந்நெறியப்பர் ஆலயத்தில், தனி சந்நதி கொண்டுள்ள "ரிண விமோஷன லிங்கேஸ்வரர்" கும்பகோணம் – திருவாரூர் சாலையில் கும்பகோணத்தில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது இத் தலம்.

ரிண விமோஷனரை 11 திங்கட்கிழமைகள் அபிஷேக, ஆராதனை செய்து வழிபட்டு, பின்னர் மகாலஷ்மியையும், ஜேஷ்டா தேவியையும்,பைரவ ரையும் வணங்கினால் வழிபடுபவரது வறுமையும், கடன்களும் தீரும். இத் தலத்தில் துர்க்கை சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி என மூன்று வடிவங்களாக அருளுகிறாள்.

மாசி மாதத்தில் 13,14,15 தேதிகளில் சூரியனது கிரணங்கள் இறைவன் மீதும், இறைவி மீதும் நேரடியாக விழுவது சிறப்பு.

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

## ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

# ஆன்மிக சேவை புரியும் அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்... உங்கள் சேவைக்கு எங்களால் ஆன எளிய உதவி செய்யப்படும்

ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வாட்சப் எண்: 9444228203